குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 31] பரிதாபி ஆண்டு புரட்டாசித்திங்கள் 10—10—72 [இதழ் 1

தருமையாதீனம் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகை திருக்கோயில்

18 ஆவது சதசண்டி யக்ஞ விழாவில்

27 — 9 — 68



துறைசை - தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள்

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 31 | பரிதாபி - புரட்டாசி - 10—10—72 | இதழ் 11

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. - சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

குருமணி கோயில் குடமுழுக்கு

வரலாற்றில் பொற்காலம் :

தருமை ஆதீன வரலாற்றில் பொற்காலம் கண்டவர்கள், தருமை ஆதீனத்தின் 25-ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியிருந்து அருளாட்சி செலுத்திய 'கயிலைக் குருமணி' ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆவார்கள். அவர்கள் சென்ற ஆண்டில், திருமேனி நலத்துடன் வாரணாசி யாத்திரை மேற்கொண்டு எழுந்தருளியபோது, முத்தி க்ஷேத்திரமாகிய அத்தலத்தில் பிறவாப் பெருநெறியாகிய முத்திப்பேற்றை எய்தினார்கள். குருமாமணி அவர்களின் முதலாண்டுக் குருபூஜைப் பெருவிழா, நிகழும் பரிதாபி ஆண்டு ஐப்பசித்திங்கள் பதின்மூன்றாம் நாள் (29—10—1972) ஞாயிற்றுக் கிழமையன்று மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது. இந்நன்னாளில் அவர்கள் சமயத்திற்கும் சமுதாயத்திற்கும் மொழிக்கும் ஆற்றிய அருளறப் பணிகளை நினைவுகூர்ந்து அஞ்சலிப்போம்!

வழிகாட்டியவண்மை :

கயிலைக் குருமணி அவர்கள் தம் அருளாட்சியில் தோற்று வித்த அருள் - அற நிலையங்கள் பலப்பல. திருப்பணி வகையில் எடுத்துக்கொண்டால், தருமையாதீனத்தின் அருளாட்சிக்கு உட்பட்ட 27 திருக்கோயில்களையும், மிகச்சிறந்த வகையில் புதுப் பித்துப் - புதுப்பொலிவூட்டி, சாத்திர - வேதாகம நெறிப்படி மகாகும்பாபிஷேகம் செய்வித்ததோடு, குடமுழுக்குப் பெரு விழாவை நாட்டு மக்கள் அனுபவித்துப் போற்றிப் பாராட்டும் வகையில் - தெய்வீகசிந்தை கிளர்ந்தெழ ரசிக்கச் செய்தவர்கள், வைதீக நெறியும், லௌகீக உணர்வும் இரு கண்ணெனக் கொண்டு போற்றிய கயிலைக்குருமணி அவர்கள் நிகழ்த்துவித்த கும்பாபிஷேக விழாக்கள், தமிழகத்தில் இத்தகு விழாக்கள் இப்படித்தான் நடைபெறவேண்டும் என்ற எண்ண உணர்வைத் தோற்றுவித்ததோடு பலரும் பின்பற்றும் வகையில் முன்னோடி யாக விளங்கின. 'தரையைப் பார்த்தாலே தருமபுரம் கோயில் என்று சொல்லிவிடலாம்' என்று மக்கள் பாராட்டி மகிழும் வண்ணம் திருக் கோயில்கள் அவர்கள் அருளாட்சிக் காலத்தே தூய்மை பெற்றுத் துலங்கின.

ஆட்சியின் மாட்சி :

திருக்கோயில்களேயன்றிக் கன்னியாகுமரி தொடங்கி சென்னைவரை ஆதீனத்திற்குட்பட்ட திருமடங்களை எல்லாம், எண்ணத்தைக் கவரும் வகையில் வண்ணமுறப் புதுப்பித்து, தூய்மையின் இருப்பிடமாய்த் துலங்கச்செய்து, காண்போர் கண்ணாரக்கண்டு ரசிக்கவும், வருவோர் வாயார வாழ்த்திமகிழ வும் வகைசெய்த வள்ளன்மை மிக்கவர்கள்.

தமது ஆட்சியில் அரசியல் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு அழகுற ஆட்சி செய்யும் பணியாளர்களையும், மேலாலர்களையும் உருவாக்கிய தோடு, வைதிகத்துறையில் சிவாசாரியர்களுக்கும் உள்துறைப் பணியாளர்களுக்கும் நெறியான பயிற்சியளித்து வழிபாட்டு முறைகளைக் குறைவின்றி நடத்திய குணக்குன்று அவர்கள்.

அலங்கார அழகுள்ளம் :

" உன்னைச் சிங்காரித்து உன்னழகு பாராமல்
என்னைச் சிங்காரித்து இடர்ப்பட்டேன் "

என்ற தமது ஆதினக் குருமுதல்வரின் வாக்கைத் திருவுளங் கொண்டு ஆலயத்தையும், அங்கே எழுந்தருளி அருள்வழங்கும்

தெய்விகத் திருவுருவங்களையும், வெள்ளியாலும், தங்கத்தாலும், நவரத்தினங்களாலும் கவசங்களை இழைத்து எழிலூட்டி - அலங்கரித்து அனுபவித்து, அவ்வனுபவத்தில் பிறரை ஈடுபடுத்துவதிலும் அவர்களுக்கு இணை அவர்களாகவே விளங்கினார்கள். தமிழகத்துத் திருக்கோயில்கள் யாவும் அவர்கள் காட்டிய வழியில் ஆண்டவன் திருமேனியை அலங்கரித்து அழகுகாணத் தலைப்பட்டன என்றால் மிகையாகாது.

அருச்சனை இலக்கம் ;

ஆண்டவனின் திருநாமத்தை ஆயிரம், லட்சம், கோடி என்று அருச்சித்துப் போற்றி அகமகிழ வழிகாட்டியருளிய வண்மைக்கு உரியவர்கள். மாயூரம், வள்ளலார்கோயில் தென்முகப்பரமன் திருமுன்பு தொடங்கிய கைவண்ணம், தருமையாதீனத் திருக்கோயில்களில் மட்டுமல்லாமல், தமிழகமெங்கும் பரவி, நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாகப் பக்திப்பயிர் வளர்த்து வருகிறது.

வெளியீட்டு அரும்பணி :

பட்டி தொட்டி முதல் பட்டணத்து மக்கள்வரை யாவர்க்கும் இறை உணர்வும் - அறவுணர்வும் பெருகிவர 600 க்கு மேற்பட்ட தோத்திர - சாத்திர இலக்கிய நூல்களை வெளியிட்டருளிய வித்தகராக விளங்கினார்கள். அறநூல் வகையில் திருமுறைகளுக்கு உரை எழுதுவித்து வெளியிட்டருளிய கருணையும், சாத்திர நிலையில் ஞானாவரண விளக்கம் கண்ட நன்னெஞ்சும் தமிழ் மக்களின் நன்றி பாராட்டுதலுக்குரிய அருஞ்செயல்களாக விளங்குகின்றன.

அருள்வளர் நெஞ்சம்

நடமாடும் பிரசாரவாகனங்கள் இரண்டு அமைத்துத் தமிழகம், ஆந்திரம், மைசூர், கேரளம், மற்றும் கடல்கடந்த இலங்கையிலும் சமயப்பிரசாரம் செய்வித்தருளி, மக்கள் மனமாசு களைந்த திருவருள் சிறப்பு மறக்கவியலாத மாட்சிமை மிக்கதாக அமைந்தது. அதில் உணர்ந்த அனுபவத்தின் முதிர்வாகத் தமிழகத் தலைநகராகிய சென்னையில் சமயப்பிரசார நிலையம் நிறுவி, அறநெறியையும், அன்பு நெறியையும், அருள் நெறியையும் மக்கள் உள்ளத்திலே வளர்க்க அடிகோலிய அறக்கருணை பூத்தவர்கள்.

புதுமை போற்றல் :

வடமொழியும் - தென்தமிழும் வளமுறச் செழித்தோங்க, தருமையம்பதியில் பல்கலைக் கல்லூரி பாங்குறக் கண்டு மாணவச்

சமுதாயத்திற்கு மாட்சிமை வழங்கி மக்கள் மனத்தில் நிறைந்தார்கள். ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களைக் கல்வி கேள்விகளில் வல்லமை பெறச் செய்ததோடு, கால நிலைக்கேற்ப கல்லூரியில் பயில்வித்துப் பட்டம் பெறும் வகைப் புதுமையைப் புகுத்திய பொற்புடையவர்கள்.

வியத்தகு யாத்திரை

> "மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடக்கினர்க்குஓர்
> வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்பது தாயுமானர் வாக்கு. கயிலைக் குருமணி அவர்கள் சமயகுரவர்களால் பாடப் பெற்ற திருக்கோயில்கள் யாவும் சென்று தரிசித்து அதன் மூலம் தலயாத்திரைகளை ஊக்கி இத்தகு வழிபாட்டு முறைமைக்கு வகைசெய்வித்தருளினர்கள். ஜோதிர்லிங்கத் தலங்கள் - இமயப்பெருந்தலங்களை எல்லாம் யாத்திரை மேற்கொண்டு தரிசித்த குருமணி அவர்கள் இவற்றிற்கெல்லாம் சிகரமாகக் கயிலாய யாத்திரை மேற்கொண்டு அப்பர் பெருமான் கயிலை கண்ட அதே ஆடி அமாவாசை நாளில் கயிலாயங்கண்டு தரிசிக்கும் திருவருள் வாய்ப்புப் பெற்றூர்கள்.

சமரச நோக்கு :

கயிலைக் குருமணி அவர்கள் இந்துமதத் தலைவர்களை எல்லாம் நன்கினிதுமதித்ததோடு ஒருங்கிணைந்து இந்துமதப் பணி நாடெலாம் பரவ நாளும் முயன்றூர்கள். இத்தகு நற்பணியை நன்கியற்ற வேண்டுமென்ற எண்ணத்தால் தமிழ் நாடு தெய்விகப் பேரவை உருவாவதற்கு ஆக்கம் நல்கி, அதன் முதல் தலைவராக மூன்றுண்டுக் காலம் விளங்கிச் சமய ஒருங்கிணைப்பிற்கு ஊக்கம் காட்டி உழைத்த உத்தமராவார்கள். இந்து சமயத்தின் ஒருங்கிணைப்போடு பிறசமயத்தவர்களின் கொள்கைகளுக்கும் - நம்பிக்கைகளுக்கும் மதிப்பளிக்கும் வகையில், ஆதீனத்தில் நடைபெறும் மாநாடுகளில் அனைத்துச்சமய விரிவுரைகளுக்கும் ஏற்பாடு செய்த ஏற்றம் மிக்கவர்கள்.

பல்வகைப் பணிகள் :

தமக்கு முன் ஞானச் செங்கோலோச்சிய குருமூர்த்திகளுக்கெல்லாம் ஆலயம் அமைத்துக் குருவழிபாட்டைச் சிறக்கச்செய்த பெருமை கயிலைக் குருமணி அவர்களுக்கே உரியது.

அனாதைக் குழந்தைகளுக்குப் புகலிடம் அளித்தும், மகப் பேற்று மருத்துவமனை கண்டும், உடற்பிணி நீங்க சித்தமருத்

துவச்சாலை சீர்பெற அமைத்தும் சமுதாய நலத்திற்குத் தக்க பணியாற்றினார்கள்.

இங்ஙனமாகப் பலதுறையிலும் மக்கள் இனத்திற்குப் பயன் படும் வகையில் பன்னூறு திருப்பணிகளைப் பாங்குறச் செய்து பரமனோடு இரண்டறக் கலந்த கயிலைக் குருமணி அவர்களின் குருபூஜைத் திருநாளில், நாம் அனைவரும் அவர்கள் செய்த அருள் அறப்பணிகளை எல்லாம் நெஞ்சில் நினைவுகூர்ந்து அவர்கள் காட்டிய அறவழி நின்று இயன்ற பணிகளை இனிதே ஆற்றி - நாட்டிற்கு நலம்பல புரிவதே நாம் அவர்கட்குச் செலுத்தும் அஞ்சலியாகும்.

கோலமார் குடமுழுக்கு :

கயிலைக்குருமணி அவர்களின் வழித்தோன்றலாக விளங்கி, தருமையாதீன ஞானபீடத்தின் 26 ஆவது குருமணியாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தம் அருளாட்சியில், இத்தகுபுனிதப் பணிகளைச்செய்து ஆதீனவரலாற்றில் பொற்காலத்தைத் தோற்றுவித்த கயிலைக் குருமணியவர்களின் திருமேனி எழுந்தருளி யிருக்கின்ற குருமூர்த்த ஆலயத்தைக் காசியில் முத்திப்பேறு எய்தியதன் நினைவாகக் காசி விசுவநாதப் பெருமானின் ஆலய அமைப்பில், ஆனந்தபரவசர் பூங்காவில் திருக்கோயில் எடுப்பித்து கயிலைக் குருமணி அவர்களின் குருபூசைத் திருநாளாகிய 29—10—72 ஞாயிற்றுக்கிழமையன்று கும்பாபிஷேகம் செய்விக்கத் திருவுளம் கொண்டுள்ளார்கள்.

இட்டபணி தொடர்வோம் :

கோயில்கள் எல்லாம் அழகு கொலுவிருக்க, எழிலுட்டி - ஏற்றமுறக் கும்பாபிஷேகம் செய்வித்த கயிலைக் குருமணி அவர்களின் திருக்கோயில் குடமுழுக்கு விழா, வரும் 27, 28, 29—10—72 ஆகிய மூன்று நாட்களிலும், யாகசாலை வழிபாடு சமயச் சொற்பொழிவுகள் இன்னிசைக் கச்சேரிகள். வேதபாராயணம் – திருமுறைப்பாராயணம், இவற்றோடு குருலிங்க – சங்கமத் திருநாளாக மிகச் சிறப்பாக நடைபெறவிருக்கிறது.

அவர்கள் இறையருளில் கலந்தருளிய நாளில் அஞ்சலி செலுத்தி, அவர்கள் அருள் அறப்பணிகளை இன்மொழிகளால் ஏற்று யாவரும் கயிலைக்குருமணி அவர்களின் நல்லறப்பணிகளை நெஞ்சத்தில் நினைந்து, அவர்கள் வழியில் பணியைத் தொடர உறுதி பூண்டு அஞ்சலி செலுத்துவோமாக.

சக்தி வழிபாடு

திரு. என். இராமகிருஷ்ண

சீற்றமும், அருளும் :

தமிழ் நாட்டில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகச் சக்தி வழிபாடு நடைபெற்று வருகின்றது என்பதைச் சரித்திரமும் இலக்கியமும் கூறுகின்றன. சக்தி வழிபாட்டை அக்காலத்தில் இரண்டு வகைகளாகப் பிரித்திருந்தார்கள். ஒன்று சக்தியின் உக்கிரத் தன்மை. மற்ருென்று அவளின் சாந்த சொரூபம். உக்கிரமாக உள்ளபோது அரக்கர் கும்பலை அழித்தாள். அப்போது அவள் சண்டி, துர்க்கை, காளி, சூலி, சதி, கபாலினி என்று அழைக்கப் பட்டாள். சாந்த சொரூபியாக உள்ளபோது அவளுடைய பெயர்கள் பவானி, கௌரி, உமை, தேவி, ஜெகதீஸ்வரி, அம்பாள் முதலியன. பாரதத்தின் பல பகுதிகளில் சக்தி வழிபாடு இருந்த போதிலும் தமிழகத்தில் அது தன் இடம் பெற்று விளங்குகின்றது என்பது சிறப்பானது.

முதன்முதலாக மிகவும் விரிவாகத் துர்க்கை வழிபாட்டைப் பற்றிக் கூறிய நூல் சிலப்பதிகாரம். தாருகன், மகிஷாசுரன் போன்ற அரக்கர்கள் துர்க்கையால் அழிக்கப்பட்டார்கள் என்று அந்தக் காப்பியம் கூறும்.

சரித்திரச் சான்றுகள் :

சரித்திர வாயிலாக நாம் துர்க்கை வழிபாட்டைப்பற்றி அறிந்தது பல்லவர் காலத்தில்தான். ஆதிவராக குகையிலும், மகிஷாசுரமர்த்தனி குகையிலும், சிங்கவரம் அரங்கநாதர் ஆலயத்திலும் விஷ்ணுவும், மகிஷாசுரமர்த்தனியும் காணப்படுகின்றனர். பிற் காலத்தில் பாண்டியர்கள் இதைப்பின்பற்றிப்பலகற்கோயில்களைத் துர்க்கைக்குக் கட்டினர்.

துர்க்கைக்கு மட்டுமல்லாமல் சக்தியின் பலவேறு வடிவங்களுக்கும் பல்லவர்கள்தான் முதன்முதலாகக் கோயில் கட்டினர். பல்லவர்களுக்கு முன்பாகச் சிலப்பதிகாரக் காலத்தில் கோயில்கள் இருந்திருக்கவேண்டும். அவை காலத்தின் பசிக்கு இலக்காகி அழிந்திருக்கவேண்டும்.

மகாபலிபுரத்தில் உள்ள சலுவன்குப்பம் "புலிக்குகை" துர்க்கைக்காக எடுக்கப்பட்டது என்று பல்லவ சரித்திரம் கூறுகின்றது. மகாபலிபுரத்தில் பல மண்டபங்கள் துர்க்கைக்காகக் கட்டப்பட்டன. "திரௌபதி ரதம்" துர்க்கைக்காக ஏற்படுத்த பட்டதாம். இன்றும் இதன் பின்புறச் சுவரில் துர்க்கையின் உருவத்தைக் காணலாம். பல்லவர் காலத்துத் துர்க்கை உருவங்கள் பலவிதமானவை.

சோழர் வழிபாடு :

பல்லவர்களுக்குப்பின்வந்தசோழர்கள் துர்க்கைவழிபாட்டைத் தொடர்ந்து நடத்தினர். நிசும்பன் என்ற அசுரனைக் கொன்றதால் அவளுக்கு "நிசும்பசூதனி" என்ற பெயர் கொடுக்கப்பட்டது. தஞ்சைக்கு அருகில் விஜயாலய சோழன் துர்க்கைக்குக் கோவில் எடுத்தான். இவள் உருவம் மிகவும் பயங்கரமானது. சோழர் காலத்தில் மிகவும் சிறப்பான துர்க்கை உருவங்கள் செய்யப்பட்டன. தஞ்சை மாவட்டத்தில் மாயூரம் பக்கலில் உள்ள புஞ்சை என்ற ஊரில் துர்க்கையின் மிகவும் அழகான உருவம் உள்ளது. திருவாரூரில் அழகான துர்க்கை உள்ளது. திருவாழ்கொளிப்புத்தூரில் துர்க்கை உருவம் விசேஷமானது கிடாத்தலைமேடு துர்க்கை அழகானது. இவை சோழர்காலத்தவை.

நரபலி மறுப்பு :

ஆதிசங்கரர் "சௌந்தர்ய லஹரி" என்ற நூலில் சக்தியின் சிறப்பைக் காட்டியுள்ளார்கள். ஆனால் சக்தியைத் திருப்திசெய்ய மக்கள் கொடுத்துவந்த நரபலியை இவர் ஏற்கவில்லை.

இருவேறு ஊர்திகள் :

சக்தியும் துர்க்கையும் சாதாரணமாகச் சிங்க வாகனத்துடன் காணப்படுகின்றன. ஆனால் சில இடங்களில் கலைமானும் காணப்படுகின்றது மகாபலிபுரம் ஆதிவராகர் குகையில் இது உள்ளது. பின்பு சோழர் காலத்திலும் இது தொடர்ந்து வந்தது. துர்க்கைக்குக் கலைமானும் வாகனமாக இருந்தது என்பதை இந்தக் கல்வெட்டுகள் காட்டின. சென்னை அரசாங்க மியூசியத்தில் சில சிலைகள் இம்மாதிரி காணப்படுகின்றன. தேவாரமும் கம்பராமாயணமும் துர்க்கையையும் கலைமானையும் பற்றிக் கூறுகின்றன.

உயிர்ப்பலி வழக்கம் :

பண்டைக் காலத்தில் துர்க்கைக்கு நரபலி கொடுக்கும் வழக்கம் இருந்துவந்தது. ஒன்பது இடங்களிலிருந்து சதையை வெட்டி எடுத்து மனிதன் தானே தேவிக்குக் கொடுத்தானாம்! இம்மாதிரி நரபலிக்கு "நவகண்டம்" என்று பெயர். பல்லவ

காலத் துர்க்கையின் சிலைகளில் சிலவற்றில்மனிதனின் துண்டிக்கப் பட்ட தலைகளும் காணப்படுகின்றன. தன் தலையைத் தானே வெட்டிக் காணிக்கை கொடுத்த தீவிர பக்தர்களும் உண்டு! பின்பு வந்த விஜயநகர மன்னர் காலச் சிற்பங்களில் இம்மாதிரி காட்சிகள் காணப்படாததால், இந்தப் பழக்கம் நாளடைவில் நின்றுவிட்டது எனத் தெரிகின்றது.

ஏழு மாதர்கள் :

துர்க்கைக்கு எழுப்பப்பட்ட பிற கலைக்கோவில்களில் "சப்த மாதாக்கள்" சிலைகள் காணப்படுகின்றன. இவர்களின் பெயர் களாவன :- பிராம்மி, மாகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி வராஹி, இந்திராணி, சாமுண்டி என்பன. சப்தமாதாக் களுக்கு ஏற்படுத்தப்பட்ட சிலைகள் திருத்தணி வீரட்டேஸ்வரர் கோவிலில் அழகாக உள்ளன. இது பல்லவர்காலக் கோவில். சோழ அரசர்கள் கல்வெட்டுகளில் துர்க்கை மற்றும் சப்த மாதாக்கள் பற்றிய விபரங்கள் உள்ளன. சிவன் கோவில்களில் சப்தமாதாக்களுக்குக் கோவில்களை சோழ அரசர்கள் ஏற்படுத் தினர். பரிவார தேவதைகளாக இவை கருதப்பட்டன. காலப் போக்கில் சப்தமாதாக்கள் கோவில்கள் குறைந்து விட்டன. 12-ஆம் நூற்றுண்டின் முடிவில் இப்பழக்கம் முற்றிலும் கைவிடப் பட்டது.

சேட்டை வரலாறு :

சக்தியின் அம்சம்தான் ஜேஷ்டா. ஜேஷ்ட்டாவை "அவலக்ஷ்மி" என்றும் கூறுவர். லக்ஷ்மியின் தமக்கை. சக்தியைத் திருமாலின் தங்கை என்றும், ஜேஷ்ட்டாவை லக்ஷ்மியின் அக்கா என்றும் மக்கள் கூறினர். புராண இதிகாசங்களிலும், சமஸ்கிருத நூல்களிலும் ஜேஷ்ட்டா வழிபாடு கூறியுள்ளது. இவளுக்கு எட்டுவிதமான வடிவங்கள் உண்டாம். ஜேஷ்டா கெடுதல்களை அடியோடு அழிக்கும் சக்தி வாய்ந்தவள். 9-ஆம் நூற்றுண்டில் ஜேஷ்டா வழிபாடு சிறப்பாக இருந்தது என்று சரித்திரம் கூறு கின்றது.

நாளடைவில் சக்தி, சப்த மாதாக்கள், ஜேஷ்ட்டாதேவி வழிபாடுகள் குறைந்து அம்மன் வழிபாடு ஆரம்பமாயிற்று. அம்மன்தான் பார்வதிதேவி.

காமக்கோட்டம் :

பல்லவர் காலத்தில் பார்வதிக்குத் தனிக்கோவில் கிடையாது. அவள் சிவனுடனும், கந்தனுடனும் சோமஸ்கந்தராகச் சேர்த்தே வழிபடப்பட்டாள். சோழர் காலத்தில் பார்வதிக்குத் தனிக் கோவில் கிடையாது. தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயத்தில் கூட

பார்வதிக்குத் தனிக்கோவில் இல்லை! இப்போது நாம் காணும் அம்பாள் கோவில்கள் பிற்காலத்தவை. பிற்காலக் கோவில்கள் "திருக்காமக்கோட்டம்" என்று பெயர் பெற்றன. பாண்டியர்கள் மற்றும், விஜயநகர அரசர்கள் தாம் கட்டிய கோவில்களில் பார்வதிக்கு முக்யத்துவம் கொடுத்தனர்.

சிற்றூர் தெய்வங்கள் :

தமிழ்நாட்டில் இவை அல்லாது மற்றும் தேவதைகள் உள்ளன. அவைதாம் "கிராம தேவதைகள்". கிராம தேவதைகளின் வழிபாடு மிகவும் புராதனமானது. சோழர் கல்வெட்டுகளில் கிராம தேவதைகளின் கோவில்களைத் "திருமுற்றம்" என்று கூறியுள்ளார்கள். இவைகளும் மிகவும் தொன்மையானவை.

கிராம தேவதைகள் பல பெயர்களைக் கொண்டுள்ளவை. பிடாரி மிகவும் பிரசித்தமான கிராம தேவதை. பலவகை பிடாரிகள் உண்டு. உடையல் பிடாரி, ஊருடையான் பிடாரி, நங்கை பிடாரி, கடுகல் பிடாரி என்று பலவிதம். இவை அல்லாமல் காளி, மகாகாளி, பத்ரகாளி, செல்லாண்டி அம்மன், திரௌபதி அம்மன் போன்று கிராம தேவதைகள் சக்தியின் அம்சமாகக் கருதப்படுகின்றன. இவைகளைக் கிராம மக்கள் வெகுவாக ஆராதிக்கின்றனர். மிருகபலி கொடுக்கின்றனர். விழாக்களில் கரகம் எடுத்துத் தீமிதி செய்கின்றனர். அம்மை நோயின் தெய்வம் மாரியம்மன். ஆந்திராவில் இவளுக்குப் பெயர் போலாரம்மா. மாரியம்மன் மழைக்கடவுளாகவும் போற்றப்படுகின்றாள். மற்றும் பல பெயர்கள் நம் நினைவுக்கு வருகின்றன. பேச்சி அம்மன் அங்காளம்மன், பங்காரம்மன், மாதம்மா, மாதங்கி முதலியன கிராம தேவதைகள்.

தருமையில் கொற்றவை :

தருமபுரத்தில் மிகவும் விசேஷமான துர்க்கைகள் இரண்டு உள்ளன. ஒன்று அஷ்டதசபுஜ மஹாலக்ஷ்மி துர்காதேவி. 18 கைகள் கொண்ட தேவியின் உருவம் போல நம் நாட்டில் எங்கும் கிடையாது. நவராத்திரியின் போது விசேஷ ஆராதனைகள் நடைபெறும். மிகச் சமீபகாலத்தில் கட்டப்பட்ட கோவில் என்றாலும், 10 கோடி அர்ச்சனையின் விசேஷத்தால் அம்பாள் மிகவும் சக்தியுடன் காணப்படுகின்றாள். தருமபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் நவராத்திரியை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவது யாவரும் அறிந்ததே. மற்றொரு கோவில் வனதுர்க்கை கோவில். ஆனந்த பரவசர் பூங்காவில் உள்ள இக்கோவிலும் சமீபகாலத்தில் கட்டப்பட்டது. வனதுர்க்கை கோவில் தமிழ்நாட்டில் அதிகம் கிடையாது. இங்குள்ள கோவில் சிறப்பானது. துர்க்கை எட்டுக் கைகளுடன் சிங்கத்தின் மீது வீற்றிருக்கின்றாள். இங்கு வசந்த நவராத்திரி விழா சிறப்பாக நடைபெறும்.

"கலைமகள் வாழ்த்து"

புலவர், திரு. இரா. செல்வக்கணபதி,

அன்னை கலைமகள் தன்னை வணங்கிடின்
அன்பு பெருகிடுமே – தமிழ்
ஆற்றல் விளைந்திடுமே!
வாணி எனஅவள் வண்ணம் உரைத்திடின்
வாக்குச் சிறந்திடுமே – கவி
நோக்கு நிறைந்திடுமே!
பாரதி என்றவள் பாதம் பணிந்திடின்
பாரில் உயர்ந்திடுமே – புகழ்
பல்கி நிலைத்திடுமே!
முன்னி வழிபடின் அன்னை சரஸ்வதி
முத்தி கொடுத்திடுமே – பெரும்
சத்தி வழங்கிடுமே!
சகலக லாவல்லி சந்நிதி நின்றிடின்
சாத்திரம் தோன்றிடுமே – நெஞ்சில்
தோத்திரம் ஊன்றிடுமே!
வெள்ளைக் கமலத்த ளின்னருள் பார்வையில்
வேகம் விளைந்திடுமே – கலைத்
தாகம் தணிந்திடுமே!
ஆய கலைகளின் தாயை நினைந்திடின்
அண்டம் வணங்கிடுமே - வளம்
மண்டிப் பெருகிடுமே!
அன்னைக்குப் பூசைகள் எண்ணி இயற்றிடின்
அத்தனையும் வருமே - தமிழ்ச்
சொத்தினையும் தருமே!

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின்

திருப்புறம்பயம் வழிபாடு

மதுரை ஆதீனத்துக்குச் சொந்தமான திருப்புறம்பயம் ஸ்ரீ கரும்படுசொல்லியம்மை சமேத ஸ்ரீ சாக்ஷிநாத சுவாமி தேவஸ்தானம் மகா கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் யாகசாலை தரிசனத்திற்கு 13—9—72 அன்று திருப்புறம்பயத்திற்கு எழுந்தருளினார்கள்.

மாலை 7 மணி அளவில் திருக்கோயில் திருமுன்பிலிருந்து மிகச் சிறப்பான முறையில் பிரசாதம் பார்த்துப் பூரணகும்பங்கள் அளித்து மேளவாத்திய இன்னிசையோடு ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களை திருக்கோயில் நிர்வாகிகளும் அன்பர்களும் வரவேற்றனர். மதுரையாதீனம் திருமடத்திற்கு ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளினார்கள். மதுரையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதாளம் அவர்கள் தருமைக் குருமணி அவர்களை வரவேற்க இருகுருமணிகளும் சிறிது நேரம் உரையாடி மகிழ்ந்து திருக்கோயிலுக்கு எழுந்தருளினார்கள்.

அம்பிகைகோயில் வாயில் திறப்பு விழா :

அம்பிகை கோயிலுக்கு எதிரே புதிதாக அமைக்கப் பெற்றுள்ள நுழைவாயில் திறப்பு விழா நடைபெற்றது. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் திருவாயிலைத் திறந்து வைத்தருளினார்கள். மதுரையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் வரவேற்பு வாழ்த்துரையுடன் விழா தொடங்கியது. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திறப்பு விழாப் பேருரை வழங்கியருளினார்கள்.

சுவாமி அம்பாள் திருவுருவங்களுக்குத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் நவரத்தினங்கள் இட்டு தமது திருக்கரங்களால் அஷ்டபந்தனம் சாத்தி பிம்பசுத்தி அபிஷேகங்களைச் சிறப்புறச் செய்து மலர் மாலைகள் சூட்டி தலத்திருப்பதிகப் பாராயணங்களை ஓதச் செய்து வழிபட்டு அருட் பிரசாதங்கள் வழங்கியருளினார்கள், யாகசாலை பூர்ணாகுதி தரிசனம் செய்து தருமைக்கு எழுந்தருளினார்கள்.

தருமையாதீனம் 26-ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள்

திருப்புறம்பயம் திருக்கோயில்

மகாகும்பாபிஷேக விழாவை ஒட்டி நிகழ்ந்த

ஸ்ரீ அம்பிகைக்கோயில் திருவாயில் திறப்பு விழாவில்

13—9—'72 இல் வழங்கியருளிய

அருளுரை

திருச்சிற்றம்பலம்

கோவாய இந்திர னுள் ளிட்டா ராகக்
குமர னும் விக்கினவி நாய கன்னும்
பூவாய பீடத்து மேல யன்னும்
பூமி யளந்தானும் போற்றி சைப்பப்
பாவாய இன்னிசைகள் பாடி யாடிப்
பாரிடமுந் தாமும் பரந்து பற்றிப்
பூவார்த்த கொன்றை பொறிவண் டார்க்கப்
புறம்பயம்நம் மூரென்று போயி னரே.

திருச்சிற்றம்பலம்

மெய்யன்பர்களே!

நாளையதினம்ஸ்ரீசாக்ஷி நாதசுவாமிக்கும், ஸ்ரீகரும்படுசொல்லி அம்மைக்கும் ஏனைய பரிவார தெய்வங்களுக்கும் மகாகும்பாபிஷேகம் நிகழ இருக்கிறது. விழாவை முன்னிட்டு இவ்வூர் மக்கள் கிராமத்தை அழகுறுத்தி அலங்கரித்துள்ளார்கள். வழிகளெல்லாம் வளைவுகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பெற்றுள்ளன.

வீட்டில் திருமணம் முதலிய நிகழ்ச்சிகள் நடைபெறுங் காலங்களில் வீட்டைத் தூய்மைசெய்து பழுது பார்த்து வெள்ளையடித்து வண்ணம்தீற்றி அலங்கரிப்போம். அதுபோலத் திருக்கோயில் மகாகும்பாபிஷேக காலங்களில் புனருத்தாரணம் செய்து கோயிலைப்பழுதுபார்த்துத் தூய்மைசெய்து அழகுறுத்துகிறோம். கோயிலுக்கு வெளியே யாகசாலை அமைத்து அலங்கரித்து அங்கே சுவாமியை எழுந்தருளச்செய்து கோயிலைத் தூய்மைசெய்கிறோம். 12 - ஆண்டுகளுக்கு ஒருமுறை திருக்கோயில்களுக்கு மகாகும்பாபிஷேகங்கள் செய்விக்கவேண்டும். இயலாத கோயில்களில் அஷ்டபந்தனம் சார்த்தியாவது மகாகும்பாபிஷேகம் செய்விக்கவேண்டும். திருவுருவங்கள் அஷ்ட

பந்தனம் இல்லாமல் இருத்தல் கூடாது. பன்னிரண்டு ஆண்டு களுக்கு ஒருமுறை மின்சார சாதனங்களை வீடுகளில் புதுப்பிக் கிறோம். பழுதடைந்த மின்கம்பிகளை அகற்றிப் புதியனவற்றைப் பொருத்துகிறோம். அவ்வாறு செய்யத் தவறினால் அதன்வழி கிடைக்கும் ஒலி, ஒளி, காற்று முதலியவற்றைப் பெறுதல் முடி யாது. அதுபோல அஷ்டபந்தனமில்லாத கோயில்களில் திரு வுருவங்களில் தேங்கி நிற்கும் தெய்விக ஆற்றலை நாம் பெறுதல் இயலாது. அஷ்டபந்தனம் சுக்கான், கொம்பரக்கு, பூங்காவி மெழுகு, ஜாதிலிங்கம், கருங்குங்குலியம், செம்பஞ்சு முதலிய எட்டுப் பொருள்களால் செய்யப்பெறுவது. சிமெண்டினால்மட்டும் பதியவைப்பது ஏகபந்தனம் எனப்படும்.

கொம்பரக் கொருபங்கு திரிபங்க தேகருங்
குங்கிலிய மூன்றுசுக்கான்
கொண்டமுக் காற்பங்கு காவிக்கல் வெண்மெழுகு
கூறுநவ நீதமூன்று
செம்பஞ்ச தத்தொகை யிலிங்கமே காற்பங்கு
சேர்த்திடித் திளமெழுகுபோற்
செய்வதுய ரட்டபந் தனவிதிய தென்றுமறை
செப்பினை யிலிங்கமாதி
விம்பமி டத்தணிந் துயர்சம்பு ரோட்சணம்
வியன்பொழுதி லபிடேகமா
விதிசெய வமைத்தனைகொ லதுபெயர்ந் திடிலரசு
வியனிராச் சியவிநாசம்
செம்பதும வல்லிதன தம்புயநல் விடெனத்
தினமுமக லாதுவாழுஞ்
சிவசிதம் பரவாச சிவகாமி யுமைநேச
செகதீச நடராசனே.

அறிவற்ற பொருள்களால் விளையும் ஆற்றல் சடசக்தி எனப்படும். மின் சக்தி முதலியவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இறைவனுடைய சக்தி சித்சக்தி. இந்தத் தெய்விக ஆற்றல் திருக்கோயில்களில் பிரமரந்திரம் எனப்படும் விமான உச்சித்துளை வழியாக விமானக்கலசம் வரை ஊடுருவி நிற்கிறது. வானொலி நிலையங்களில் அமைக்கப்படும் ஒலி அலைகளை வாங்கி உலகில் பரவச்செய்யும் கருவிபோலத் தெய்விக ஆற்றலைக் கலசம் வெளிப்படுத்தி நிற்கிறது. அதனால்தான் கலசங்கள் செம்பினால் இயன்றதாக அமைக்கப்படுகிறது. அஷ்டபந்தனம் இல்லாத மூர்த்திகளில் தெய்விக ஆற்றல் நிலைபெறாது. ஓட்டைக் குடத்தில் தண்ணீர் தேக்கிவைத்தல் முடியுமா? அஷ்டபந்தனம் தெய்விக மூர்த்திகளுக்கு இன்றியமையாதது. யாகசாலை என்பது சர்வலோக நாயகனாக விளங்கும் இறைவன் எழுந்தருளும் தற்காலிக இடமாகும். திருக்கோயில் கருவறைகளைத் தூய்மை

செய்யக் குறிப்பிட்ட சில நாட்களில் இறைவனைக் கடங்களில் எழுந்தருளச் செய்து யாகசாலைகளைக் கலையழகோடு மிளிரச் செய்து அதில் எழுந்தருளச்செய்து யாகங்கள், வேதசிவாகம பாராயணம், மங்கல வாத்தியங்கள், இன்னிசை, சமய விரிவுரைகள் முதலியவற்றால் சிறப்பாகக் கொண்டாடி தரிசித்து மகிழ்கின்றோம். இறைவன் எங்கும் இருக்கின்றார். கோயிலில் அவர்தம் அருளைப்பெறும் வகையில் வெளிப்பட்டு நிற்கின்றார். சுந்தரர் வரலாற்றில் இறைவனை மகிழ மரத்தடியில் எழுந்தருளுமாறு வேண்டிக்கொண்டதாகக் காண்கின்றோம். இறைவனைப் பக்தி விசுவாசங்களினால்தான் நாம் காணமுடியும். "காதன்மையால் தொழுமடியார் நெஞ்சினுள்ளே.............. கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே" என்றும், "அன்போடு அகங்குழைந்து உருகுவார்க்கு அல்லாமல் ஏனையோர்க்கு இறைவன் தோன்றான்" என்றும் அப்பர் சுவாமிகள் அருளிச் செய்கின்றார்கள். திருக்கோயில்கள் இறைவனது ஆற்றல் தேங்கி நிற்கும் இடங்கள். மின்னலாற்றலைத் தேக்கி நிற்கும் நிலையங்கள் போலவும், அணைக்கட்டுக்களில் தண்ணீர் தேங்கி நிற்குமாறு போலவும் தெய்வ ஆற்றல் தேங்கி நிற்கும் இடங்களாகக் கோயில்கள் உள்ளன. இதனை உணர்ந்து மக்கள் இறையருள் பெறத் திருக்கோயில்களுக்குச் சென்று இறைவன் திருவருளைப் பெறுதல் இன்றியமையாதது.

திருப்புறம்பயம் ஊழிக் காலத்திலும் அழியாத இயல்புடையது. புறம்பு-அயம் என்று பிரித்துப் பொருள் காணல் வேண்டும். ஊழிக்காலத்துப் பிரளய வெள்ளம் புறம்பே நிற்க அழியாது விளங்கிய தலம் என்ற பொருளுடன் இத்தலம் விளங்குகிறது. புறத்தே நீர்வளம் பெற்றது என்ற நிலையிலும் இத்தலம் உள்ளது என்று கொள்ளலாம். ஊழி வெள்ளத்தில் அழியாது மிதந்த பிறிதொரு திருத்தலம் சீகாழி.

ஆதித்த சோழ மன்னன் பல்லவன் துணையோடு பாண்டியனைப் புறங்கண்ட இடம் என்ற வரலாற்றுச் சிறப்புக்குரியதாக விளங்குவது. வன்னி, கிணறு, இலிங்கம் ஆகியவற்றுடன் இறைவன் வணிகனுக்கு நடைபெற்ற திருமணத்தினை உலகோர் அறியச் சாட்சி கூறியருளிய தலச்சிறப்புடையது. மணிவாசகர், "புறம்பயமதனில் அறம் பல அருளியும்," என்று இத்தலத்திறைவன் அறமுரைத்த பாங்கை அருளிச் செய்கின்றார். இத்திருக்கோயிலில் அம்பிகை திருக்கோயிலுக்கு எதிரே அமைக்கப்பெற்ற வாயிலைத் திறந்து வைக்கும் பேற்றைத் திருவருள் வழங்கியிருக்கிறது. திருமறைக்காட்டில் வேதங்களால் அடைக்கப்பெற்ற திருக்கதவுகளை ஞானசம்பந்தர் முன்னிலையில்

(தொடர்ச்சி 620-ஆம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ மெய்கண்டதேவர் குருபூஜை விழா

திருக்கயிலைமால்வரையில் ஸ்ரீ கண்ட பரமசிவம் உபதேசித் தருளிய ஞான உபதேசத்தை இச்சந்தானுசாரியர்கள் முறையே பெற்று உலக மக்கள் உய்யுமாறு அருள் நூல்களாக வெளிப் படுத்தியும் வழிவழியாகத் திருமரபுகளைத் தோற்றுவித்தும் சமய நெறிகளை வளர்த்தனர். நந்திதேவர், சனற்குமாரர், சத்திய ஞானதரிசினிகள், பரஞ்சோதிமுனிவர் ஆகியோர் அகச்சந்தான குரவர் என்றும் மெய்கண்டார், அருணந்திசிவம், மறைஞான சம்பந்தர், உமாபதிசிவம் ஆகியோர் புறச்சந்தானகுரவர் என் றும் வழங்கப்பெறுவர். நிலவுலகில் முதன்முதலில் மெய்கண்டார் பெற்ற உபதேசமே இன்று திருக்கயிலாய பரம்பரை என்று வழங்கப்பெறும் ஆதீனங்களாக விளங்குகின்றன, மெய்கண்டார் குருபூசை விழா வரும் ஐப்பசி சுவாதிநாளன்று 5—11—72 இல் நிகழ உள்ளது.

திருமுனைப்பாடிநாட்டில் பெண்ணுகடம் என்னும் தலத்தில் சைவவேளாளர் குலத்தில் அச்சுதகளப்பாளர் என்ற அருந்தவப் பெரியார் வாழ்ந்துவந்தார். எல்லா வளங்களும் பெற்றுயர்ந்த அவர்களுக்கு மக்கட்பேறு இல்லாதிருந்தது. சைவ மெய்நெறி விளங்குமாறு செய்யவல்லதொரு ஆண் மகவு தனக்குக் கிடைக்க வேண்டுமென்று விரும்பியது அவர் உள்ளம். தம் குலகுருவாக விளங்கிய திருத்துறையூர் ஸ்ரீ சகலாகமபண்டிதரிடம் தம் விண் ணப்பத்தைத் தெரிவித்தார். ஸ்ரீ சகலாகமபண்டிதர் திருமுறை களைப் பூசித்து கயிறு சார்த்திப் பார்த்தார். "பேயடையாப் பிரிவெய்தும் பிள்ளையினேடு உள்ளம் நினைவாயின வரம் பெறுவர்" என்ற பாடல் உதயமாயிற்று. அச்சுதகளப்பாளர் அவ்வாறே தம் துணைவியாருடன் திருவெண்காடு சென்று முக் குள நீராடிப் பெருமான் அருள்பெற்றுத் தம் ஊர் சென்று மகிழ்ந்திருந்தார். சிவஞான ஞாயிறுக மெய்கண்டதேவர் அச்சுத களப்பாளருக்கு அரும்பெறல் மகவாய் வந்தவதரித்தார். சுவேத வனப் பெருமாள் என்ற பெயர் சூட்டி பெற்ருேர் போற்றி வளர்த் தனர். இவரது தாய் மாமனர் இவரைத் தமது ஊராகிய திரு வெண்ணெய் நல்லூருக்கு எடுத்துச்சென்று வளர்த்துவந்தார். வயது இரண்டாயிற்று.

வீதியில் குழந்தை விளையாடிக்கொண்டிருந்தது. பரஞ் சோதிமாமுனிவர் வான்வழியே கயிலையிலிருந்து பொதிகைக் குச் சென்றுகொண்டிருந்தவர் தமது விமானம் ஓரிடத்தில் தடைப்பட்டு நிற்பதைக்கண்டு நிலவுலகை நோக்கினர். ஞான குழந்தை விளையாடியது தெரிந்தது. இறைவன் திருவருளால்

தாம் பெற்ற உபதேச உண்மைகளை மண்ணுலகம் பெற்றுய்ய வேண்டும் என்று கருணைகொண்டு கீழே இறங்கிவந்து குழந்தைக்கு உண்மை ஞானங்களை உபதேசித்து ஞானபுத்திரராகிய குழந்தைக்கு மெய்கண்டார் எனத் தீக்ஷா நாமம் சூட்டிச்சென்றார்.

உவமையிலாக் கலைஞானமும் உணர்வரிய மெய்ஞ்ஞானமும் நிரம்பப்பெற்ற மெய்கண்டதேவர் தாம் பெற்றஉண்மைப் பொருள்களால் சிவஞானபோதம் என்ற சிறந்த நூலை அருளிச்செய்து அடியார்களுக்கு அந்நூற் பொருள்களை விரித்துவைத்து அருள்பாலித்தார். இவர் தம் குலகுருவாகிய சகலாகமபண்டிதரும் இவரது பெருமையை உணர்ந்து இவரிடம் உபதேசம் பெற்று அருணந்திதேவர் என்ற திருப்பெயருடன் முதல் மாணவரானார். தம் குருநாதர் அருளிய சிவஞானபோதத்திற்குச் சிவஞானசித்தியார் என்ற விரிநூலைச் செய்தருளினர். இவ்விருநூல்களும் சைவசித்தாந்தசாத்திர உண்மைப் பொருள்களை விளக்கும் சிவஞான நூல்களாய் விளங்குவன. இவ்வாறு தம்மைவந்தடைந்த அடியவர்கட்கு ஞானோபதேசங்கள் செய்து விளங்கிய மெய்கண்டார் அருணந்திதேவ நாயனருக்கு ஆசாரியத்தன்மை வழங்கினர். ஐப்பசிச் சுவாதித் திருநாளில் சுத்தாத்துவித சித்தாந்த முத்திநிலை கூடியருளினர். சைவ மெய்யன்பர்கள் நமது ஞானசாரியராக விளங்கி சைவமெய்ந்நெறியை வளர்த்த ஸ்ரீ மெய்கண்டதேவர் குருபூஜைத் திருநாளைக் கொண்டாடி மகிழ்வோமாக.

(618- ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்பரடிகள் திறந்தருளினர். திருஞானசம்பந்தர் திருமடத்தின் தலைவர் முன்னிலையில் வேதாரணியம் நிகழ்ச்சியை நினைப்பூட்டும் வகையில் வரணி ஆதீனகர்த்தரும் உடனிருக்க இத்திறப்புவிழா நிகழ்ந்துள்ளது. நாளை திருக்கோயில் மகா கும்பாபிஷேகத்தைக் கண்டு மகிழ இருக்கிறீர்கள். எல்லோரும் பார்த்துத் தரிசிப்பதற்குத்தான் விமான கும்பாபிஷேகம் நிகழ்கிறது. கருவறை விமானம் சிரசு; மூர்த்தி உயிர். கும்பாபிஷேகம் ஒரு குழந்தையின் பிறப்புக்கு ஒப்பாகக் கருதற்குரியது. கும்பாபிஷேகத்தின் போது மூலவரைத் தரிசிக்க இயலாதவர்கள் பின் நிகழும் மண்டலாபிஷேகத் திருநாட்களில் ஒருநாளில் இறைவனை வழிபாடு செய்யலாம். ஆண்டுதோறும் கும்பாபிஷேக நாளில் சம்வத்சராபிஷேகம் நிகழும். நமது சமய வழிபாடுகளில் அமைந்துள்ள இத்தகைய நுணுக்கமான உண்மைகளை மக்கள் உணர்ந்து இறைவழிபாடுகளில் தம்மை ஈடுபடுத்தி வாழ்தல் வேண்டும். இத்தகைய மகாகும்பாபிஷேகத்தை மதுரையாதீனம் மகாசந்நிதானம் அவர்கள் சிறப்பாகச் செய்விப்பது பாராட்டுக்குரியது. அன்பர்கள் மகா கும்பாபிஷேகத்தைத் தரிசித்து இறைவன் திருவருள் பெற்று இன்புறுவார்களாக.

சிறுகதை

கண்ணீர்ப் பூக்கள்!

செஞ்சொற்கொண்டல், புலவர்

திரு. சொ. சிங்காரவேலன் M. A., Dip. Ling.,

உலகப்பர் :

நினைத்தாலே நெஞ்சு புண்ணாகின்றது. எவ்வளவு நாள் துன்பப்பட்டு அவனை முன்னுக்குக் கொண்டுவந்தேன்? அவனுடைய தொடக்கக் கல்வி முதலாகக் கல்லூரிக் கல்வி வரைக் கண்ணுங் கருத்துமாகக் காத்து வந்ததற்குப் பயனா இது? என்னுடைய மகன் — இலட்சிய வேகம் உடையவனாக, நாட்டுப் பற்றும், மொழிப்பற்றும், கடவுட்பற்றும் உடையவனாக முன்னுக்கு வந்து காந்தியடிகள் சத்திய நெறியைப் பின்பற்றும் தலை மாணவனாக இருக்க வேண்டும் என்றுதான் பாடுபட்டேன்.

அந்த நாளில் விடுதலைப் போராட்டக் காலத்தில், அன்னியரின் ஆட்சியில் என் இளமையில் நான் பட்ட இன்னல்கள் இப்போதும் என் நெஞ்சில் பசுமையாக உள்ளன. பள்ளியிறுதிப் படிப்பில் நான் கடைசிப் பருவத்தில் இருந்தபோது காந்தியடிகள் விடுத்த அறைகூவல் என் உணர்ச்சி நரம்புகளைத் தூண்டியது. 'சொந்த நாட்டிற் பிறர்க்கு அடிமை செய்திடோம்' என்று கிளர்ந்தெழுந்த இந்திய இளைஞர் கூட்டத்தின் பேரணியில் நானும் ஒருவன் ஆனேன்.

ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்டேன். கதராடை அணிந்தேன். பள்ளிப் படிப்புப் பாதியில் நின்று போயிற்று. விதவைத் தாயார் எல்லோரையும் போல, 'படிப்புத் தானடா உனக்கு வேண்டும்! நாடாவது, மண்ணாங் கட்டியாவது? எவன் ஆண்டால் உனக்கென்ன?' என்று கூறுபவராக எனக்கு அமையவில்லை.

"காந்தியடிகளின் வேண்டுகோள் என் இதயத்திலும் பாய்கின்றது! உலகப்பா! உன் முடிவு சரியானது. இந்திய நாட்டின் அடிமைத்தளையை அறுத்தெறியும் புனிதப்பணி உன் வாழ்க்கைப் பணியாக இருக்கட்டும்"

என்றாரே என் தாயார்! கோடியில் ஒருவரைத்தான் இவ்வாறு பார்க்க முடியும். அடிமை விலங்கை ஒடித்தெறிந்து

இந்திய அன்னையைச் சுதந்திர வாழ்வில் மலர்விக்க வேண்டும் என்று நான் எண்ணியதைவிட மிகத் தீவிரமாக இருந்தார் என் அன்னையார். விடுதலைப் போராட்டத்தை ஒரு வேள்வியாகவே கருதினர். என்னுடைய முடிவைச் சரியானதென்று ஒப்புக் கொண்டார். விளைவு? பொதுக்கூட்டங்களில் வீரக் கனல் பறக்கப் பேசலானேன். பல்லாயிரம் இளைஞர்களின் இதயத்தைக் கெடுப்பதாக வெள்ளை அரசு எண்ணிற்று; தன் ஒருகண்ணை என்மேல் வைத்திருந்தது.

மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தின் முன் நானும் என் தோழர்களும் நடத்திய மறியல் சில தீவிரவாதிகளால் வன்முறையாக மாறிவிட்டபோது, அலுவலகக் கட்டிடம் சிதைந்ததற்கும், விலை உயர்ந்த கார் பழுதுபட்டதற்கும் பொறுப்பாக எண்ணற்றோரைக் கைது செய்தது அரசு. நானும் அதில் இருந்தேன் என்று சொல்லத் தேவையில்லை. சிறைச்சாலையில் ஆறு மாதங்கள் இலட்சியக் கனவுகள் — அண்ணல் காந்தியடிகளார் 'அரிசன்' ஏட்டில் எழுதிய புரட்சிக் கருத்துக்கள் பொதிந்த இலட்சியப் பொறிகள் — மின்னலிட ஒரு மௌனத்தவம் இருக்க நேரிட்டது; ஆம்; என் வாழ்வில் கிடைத்த மகிழ்ச்சிக்குரிய நாட்கள் அவை.

என் அன்னையார் நோயால் வருந்திப் படுக்கையில் கிடந்த போது, நான் சிறைச்சாலையிலிருந்து தண்டனை முடிந்து வந்ததும், எனக்கென்றே காத்திருந்த என் மாமன் மகள் மரகதத்தை எளியமுறையில் சுவாமிமலையில் திருமணம் செய்து கொண்டதும், அதன் பிறகு அடுத்தடுத்து நடந்து விட்ட செய்திகள். மகனுக்கு மணம் முடித்துவிட்ட பூரிப்புடன் கண்களை மூடிவிட்ட தாயாரின் பிரிவு என் வாழ்வில் துயரக் களைக் கொழுந்து விட்டெரியச் செய்துவிட்டது. அப்போது குளிர்நிலவாக, இனிய தென்றலாக இருந்து என் வாழ்வில் ஒளியும் குளிர்ச்சியும் கூட்டினள் மரகதம். தலைமகனைக் கண்ணன் பிறந்ததும் நாங்கள் பெற்ற மகிழ்ச்சிக்கு அளவில்லை. வளர்ந்து கல்வி பயிலப்பயில என் இலட்சியத்திற்கு எதிர்த் திசையில் நெடுந்தொலைவு செல்லலானுன் கண்ணன். அதனுடைய உச்சக்கட்டம் உள்ளூர்க் கல்லூரியில் பி. ஏ., இறுதி யாண்டு பயிலும் அவனுடைய சென்ற வாரத்துச் செயல்.

கல்லூரி முதல்வரிடமிருந்து சென்ற வாரம் வெள்ளிக்கிழமை முற்பகல் அழைப்பு வந்தது; இவ்வாறு பலமுறை ஓராண்டிற்குள் என்னை முதல்வர் அழைப்பதும் நான் சென்று வருவதும் பழக்கமாகி விட்டவை. குமைகின்ற மனத்துடன்தான் முதல்வரைச் சந்திக்கச் சென்றேன்.

முதல்வர் முக்கண்ணர் :

உலகப்பரை எண்ணுகின்றபோதே எனக்கு வருத்தம் உண்டாகின்றது. எவ்வளவு நல்லவர்! காந்தியக் கோட்பாடுகளில் எவ்வளவு அசைக்க முடியாத நம்பிக்கை உடையவர். தம்முடைய அழியாத நாட்டுப் பணியால் விடுதலைப் போராட்ட வரலாற்றில் சிறப்பிடம் தேடிக்கொண்டவர். அதன்பிறகு தம் வாழ்வை எளிய முறையில் அமைத்துக் கொண்டு வாழ்ந்து வருபவர்! அவருக்கு இப்படி ஒரு மகனா? நல்ல மரத்திலே புல்லுருவி பாய்ந்தது போல இருக்கின்றது! புகுமுகவகுப்புத் தொடங்கி பி. ஏ., வருவதற்குள் எவ்வளவு முறை தண்டனைகள்! மன்னிப்புக் கடிதங்கள்! கண்ணன் செய்யும் செயல்களை உலகப்பர்க்காகத் தான் பொறுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த வாரம் அவனுடைய செயலைப் பொறுக்க முடியவில்லைதான். கல்லூரியை விட்டே நீக்கிவிடலாம் என்ற கருத்துடன்தான் உலகப்பரை அழைத்துவரச் செய்தேன்.

'வணக்கம்; அழைப்பு வந்தது' என்று அழகாகக் கைகளைக் குவித்தபடிப் புன்முறுவலுடன் அறைக்குள் நுழைந்தார் உலகப்பர்.

"வாருங்கள்; வாருங்கள்" என்று வரவேற்று அமரச் செய்தேன். "கண்ணன் இம்முறை செய்த செயலைச் சொல்லவே வருந்துகிறேன்; தேர்வில் சரியாக நடந்துகொள்ளவில்லை; பாடப் புத்தகத்திலிருந்தே சில பகுதிகளைத் தேர்வு நடக்குமிடத்திற்குக் கொண்டுவந்து பார்த்து எழுதியிருக்கிறான். மேற்பார்வை செய்த விரிவுரையாளரிடம் பண்புக் குறைவாக நடந்திருக்கின்றான்" என்றேன் சிறிது தயக்கத்துடன். உலகப்பர் முகத்தில் துயரம் நிழலாடியது "கண்ணனின் இச்செயல் கண்டிப்பாகத் தண்டித்தற்குரியது. இந்நாள்வரை பொறுத்திருந்ததே தங்கள் பெருந்தன்மையைக் காட்டுகின்றது. இது முறை மீறிய செயல். இதற்குத் தண்டனை கொடுத்தே தீரவேண்டும்" என்று உணர்ச்சியுடன் உலகப்பர் சொல்வதைக் கேட்டதும் நான் திடுக்கிட்டுவிட்டேன். "இத்தனை ஆண்டுகள்; ஒவ்வொரு முறையும் நான் கூறியும், தாங்கள் என்பால் கொண்ட பேரன்பு காரணமாக, அவனைச் சரியாக ஒறுத்தல் செய்யாமல் விட்டு விட்டீர்கள். இம்முறை அவனை ஒறுத்தல் அவசியமாகின்றது. களையெடுப்பது போல் ஆகும். இப்படிச் சிலர் இருப்பதால் பலர் நல்லொழுக்கம் பாதிக்கப்பட்டுவிடும். என்பொருட்டு, எனக்காக — தங்களை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்; அவனைக் கல்லூரியை விட்டே நீக்கிவிடுங்கள்" என்றார் அவர்.

நான் அதிர்ந்து நின்றேன். "அண்ணல் காந்தி அடிகளின் அறக் கோட்பாடு என் உயிர்க்கொள்கை; அதுதான் இவ்வளவு நாள் பொறுமையுடன் இருக்கத் தூண்டிவிட்டது; அதன் எல்லை தாண்டியாயிற்று. அவன் திருந்துவதற்கு இதுதான் வழி" என்று கூறி எழுந்தார் அவர்.

இப்படியும் ஒருவர் இந்த நூற்றாண்டில் இருக்க முடியுமா? "நல்லார் ஒருவர் உளரேல்" என்ற ஔவை திருவாக்கு என் நினைவில் எழுந்தது. ஒன்றும் பேசாமல் அவரை வழியனுப்பி விட்டு எழுதுகோலை எடுத்தேன்; எதிரில் சுவரில் மாட்டப் பட்டிருந்த காந்தியடிகளின் படம் என் கண்ணில் பட்டது. அந்த 'மோகனப் புன்னகை' எனக்கு ஏதோ ஒன்றைச் சொல்வது போலிருந்தது.

மரகதம் :

கல்லூரியிலிருந்து கவலை தோய்ந்த முகத்துடன் உள்ளே நுழைந்தார் என் கணவர். அசையாத அவர் உள்ளத்தில் அசைவா? கண்ணன் கடமைக்குறைபாடுதான் அதற்குக் காரணமாக இருக்க முடியும். "கல்லூரியை விட்டே நீக்கச் சொல்லிவிட்டேன் மரகதம்" என்று தம்முடிவைச் சொல்லிய வாறு மிதியடிகளைக் கழற்றிவிட்டுக் கூடத்து ஊஞ்சலில் அமர்ந்தார் அவர்.

"என்ன? அப்படியா?" என்றேன்.

"ஆம், அவன் தவறுகளுக்கெல்லாம் சிகரமாகத் தேர்வில் பாடப் புத்தகத்தை நகல் செய்து விட்டான். மீண்டும் பொறுமையா? தண்டனைக் குறைப்பா? முதல்வரே வருந்தினர். முடிவை எடுக்கும்படிக் கூறிவிட்டேன்" என்று கூறிய படி என்முகத்தைப் பார்த்தார். என் முகத்தில் துயரச்சாயல் சிறிது படிந்தாலும் துடித்துப் போய்விடுவார் அவர். "சரியான காரியம் செய்தீர்கள்" என்றேன் மலர்ந்த முகத்துடன். "மரகதம்! நீ என்ன சொல்கிறாய்?" என்றார் அவர். "பின் என்ன? நேர்மைக் கொள்கை உடைய உங்கள் பொறுமைக்கும் எல்லை இல்லையா? அவனுடைய தலை விதியை மாற்ற நாம் யார்? சத்திய சோதனை – உங்கள் வாழ்வில் நிகழ்ந்து விட்டது" என்றேன்; என் கண்கள் பனித்தன. எழுந்து வந்து அதனை மெல்லத் துடைத்துவிட்டார் அவர்; இப்போது அவர் கண் களிலும் நீர்க்கோடிட்டதை என்னால் காண முடிந்தது.

கண்ணன் :

இப்படி ஒரு நிலை என் வாழ்வில் உண்டாகும் என்று நான் நினைக்கவே இல்லை. என்னுடைய அறியாமை என்னுடைய கண்களை இவ்வளவு நாள் மூடியிருந்தது. விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட இலட்சிய வீரர்க்கு நான் மகனாகப் பிறந்துவிட்டதற்காக வெட்கப்படுகிறேன். இத்தனை நாள் அந்தத் தகுதியை இழந்துவிட்டேன். நேற்று முதல்வர் கூப்பிட்டு எனக்கு வழங்கிய அறிவுரை - ஆம்; முப்பது மணித்துளிகளுக்கு மேல் எனக்கு வழங்கிய நல்லுரை என் மூடிய கண்களைத் திறந்துவிட்டது. என் பெற்றோர் கண்டுவரும் கனவுகளுக்கு ஏற்றவனா நான்? இல்லை; இல்லை!

என் இதயக் கதவுகள் திறந்து கொண்டன. அங்கே என்னையே நான் கண்டேன். என்னுடைய வீழ்ச்சி தெரிந்தது; எனக்கு விடிவு இல்லையா? ஏன் இல்லை?

நொந்துபோயிருக்கும் என் தந்தையார் உள்ளத்திற்கும், இடிந்து போயிருக்கும் என் அன்னையார் நெஞ்சத்திற்கும் அது தான் சரியான மருந்து என்று முடிவெடுத்தேன்.

நேரே, மாவட்ட ஆட்சியாளர் அலுவலத்தில் இராணுவத் திற்குப் படித்த இளைஞர்களைப் பணிக்குத் தேர்ந்தெடுக்கும் இடத்திற்குச் சென்றேன். என்னைப் பதிவு செய்துகொண்டேன். இதோ நான் எழுதும் கடிதத்தை என் தந்தையார் நாளை பார்க்கும்போது என் மாற்றத்தைக் கண்டு நிச்சயம் மனம் மலர்வார்.

விமான நிலையத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்களை வடக்கே அழைத்துச் செல்லவிருக்கும் விமானம் அதோ வந்துவிட்டது. சாரிசாரியாகச் செல்லும் இளைஞர் அணியில் தலை நிமிர்ந்து செல்கின்றேன் நான். விமானத்தின் படிகளில் ஏறும் போது, நாட்டிற்காக நான் எடுத்துவைக்கும் ஒவ்வொரு படியாக அது எனக்குப்பட்டது.

விமானம் பறக்கத் தொடங்கிவிட்டது. சன்னல் ஓரத்தில் அமர்ந்திருந்த நான் வெளியே பார்த்தேன். அதோ, தொலை வில் உள்ள கோபுரமும், அதை ஒட்டிய மாடி வீட்டில் இருக்கும் என் தந்தையாருடைய உள்ளமும் என்னுடைய இதயத்தில் நிழலாடின. விமானப் பணிப்பெண் என்முன் நீட்டிய தட்டில் கிடந்த பத்திரிகைகளில் ஓர் அட்டைப்படம் என் உள்ளத்தைக் கவர்ந்தது; ஆம்; அதில் காந்தியடிகள் ஒரு கோலை ஊன்றிய படி வேகமாக நடந்து செல்லும் தோற்றத்தை நான் கண்டேன்; இது என்ன, என் கண்களிலும் கண்ணீரா?

திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி

மூலமும் – உரையும்

உரையாசிரியர் :-

பண்டித வித்துவான், தருமையாதீனத் தமிழ்ப்புலவர்

திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை

(மலர் 31. இதழ் 10. பக்கம் 568 இன் தொடர்ச்சி)

உற்ற நின்னவா வேபினும் பிறப்பினை
யுதவும்வித் தெனநெஞ்சே
மற்ற தைத்தடுத் திடுதியிச் சைக்கடல்
வற்றுமேற் பலவாகப்
பற்றும் எண்ணமாம் திரைகளும் மாய்ந்திடும்
பார்புக ழையாற்றுப்
பெற்றி யாரிறை பூரண வடிதொழப்
பெறலைய மிலை னாமே. (49)

(இ - ள்) நெஞ்சே! நின் அவா ஏ பி(ன்)னும் பிறப்பினை உதவும் வித்து என மற்று அதை தடுத்திடுதி - உன்னுடைய ஆசையே மீண்டும் மீண்டும் பிறவிப் பெரும் பிணியினைக் கொடுக்கும் விதையாகும் ஆகையினால் மேலும் மேலும் வளராத படி அவ்வாசையை மன உறுதிப்பாட்டினால் தடுப்பாய்; இச்சை கடல் வற்றும் ஏல் - அங்ஙனம் தடுக்கும் காரணத்தால் அவ்வாசையாகிய பெருங்கடல் வற்றச்செய்யும் ; (அங்ஙனம் வற்றப்பெற்றால் நீரில்லாமையால்) பலஆகப்பற்றும் எண்ணம் ஆம் திரைகளும் மாய்ந்திடும் - ஐம்பொறி வழியாகப் புலன்வழிப் பற்றுதலைச் செய்யும் நினைவாகிய அலைகள் அனைத்தும் அறவே அழிந்தே போகும் ; (இலதாகிவிடும்). பார்புகழ் ஐயாற்று பெற்றியார் இறை பூரண அடி நாம் தொழ பெறல் ஐயம் இலை - உலகினரால் உவந்து ஏத்தும் திருவையாற்றின்கண் எழுந்தருளிய நிறை குணராகிய இறைவர்தம், நிறை திருவடிகளை நாம் ஒருமித்து வணங்கப்பெறுதலில் சிறிதும் ஐயப்பாடுகிடையாது. உறுதியாகத் தொழுது உறுதி பெறுவோம்.

(கு - ரை) "அவாவென்ப வெல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றும்
தவாப் பிறப்பினும் வித்து"

என்பது பொய்யாமொழி. ஆகலின், அவாவின் காரணமாகப் பிறவி யுண்டாதலை வற்புறுத்தினராயிற்று. "பற்றவா வேரொடும் பசையறப் பிறவிபோய், முற்றவாலுணர்வு மேன்முடுகினர் அறிவு சென்று, உற்றவானவனிருந்து யோகு செய்தானெனில், சொற்றவா மளவதோ மற்றிதன் தூய்மையே" என்பது அப்பர் வாக்கு. பற்று - தனக்குரிய பொருள்களின் வைக்கும் ஆசை. அவா என்பது, தனக்கெவ்வகையிலும் தொடர்பில்லாத பிறர்தம் பொருள்கள்மேல் வைக்கும் ஆசை. முன்னது அகப்பற்று புறப்பற்று என இருவகைத்தாம். பின்னது பலவகைத்தாம், பினும் என்பது பின்னும் என்பதன் இடைக்குறை. நாம் - உளப்பாட்டுத் தன்மைப் பன்மை. இச்சா என்பது இச்சையென வாயது. கடல் - கடத்தற்கரியது. இச்சைக்கடல், எண்ணமாம் திரைகள் என்பன உருவகம். பார் - இடவாகுபெயர். உலகிலுள்ள மெய்யடியார்களை யுணர்த்திற்று. பெற்றி - தன்மை. ஈண்டு, மண்ணினில் ஐந்தாய் என்ற பகுதியினைப் புலப்படுத்துவார் போன்று ஐயாற்றுப் பெற்றியார் எனப்பட்டது. பிருதிவி வடிவாந் தன்மையென்பது குறிப்பாற் போதருவது.

ஐயம் பாரினி லேற்றவன் பாற்கடல்
அருந்தவன் மகற்கீந்தோன்
ஐயம் பாரிய செங்கரன் உருவழித்
தருள்பவன் நன்னெஞ்சே
ஐயம் பாரிளம் பிறையணி திருவையா
றனைத்தொழின் நமக்கில்லை
ஐயம் பாரியா ளொடுவிடை மீதுவந்
தருள்வன்நற் கதிவாழ்வே. (50)

(இ - ள்) ஐயம் பாரினில் ஏற்றவன் - பிரமன் தலையோட்டில் பிச்சைதனைப் பூவுலகில் இரந்துண்டலை மேற்கொண்டவனும் (இரந்துண்ணி). அரும்தவன் மகற்கு பால்கடல் ஈந்தோன் - செயற்கரும் தவமுடைய பாலமுனிவர் எனப்பெறும் புலிக்கால் முனிவருடைய பிள்ளையாகிய உபமன்னிய முனிவருக்குத் திருப்பாற்கடலைப் பருகுமாறு அருளியவனும், ஐ(ந்து) அம்பு ஆரிய செம்கரன் உரு அழித்து அருள்பவன் - ஐவகைப் பூக்களாகிய ஐந்து அம்புகளும் நிறைந்த சிவந்த கைகளையுடைய மால்மகனாகிய மன்மதனை உருவழியக் கண்ணால் எரித்துப் பின் அருள் புரிந்தவனும். (செவ்வேள் அவதரித்தற்குக் காரணமாயினமையின் அருள்பவன்) (ஆகிய) ஐ அம்பு ஆர் இளம்பிறை அணிதிரு ஐயாறனை - அழகிய கங்கையினையும் திருவாத்திப் பூவினையும் பிறைச்சந்திரனையும் சடாமகுடத்தில் தரித்த ஐயாற்று அப்பனை,

நல்நெஞ்சே - நல்ல நெஞ்சமே, தொழின் - அவன் திருவடிகளை மனம் ஒருமித்துத் தொழப்பெறுவோமானல், பாரியாள் ஓடும் விடைமீது வந்து நல்கதி வாழ்வே அருள்வன் ஐயம் நமக்கு இல்லை - உமாதேவியாரொடும் இடபவூர்தியில் எழுந்தருளி வந்து நற்கதியாகிய முத்தியினைக் கொடுத்தருள்வான், நமக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை. நீ உறுதியாகப் பற்று. (எ - று)

(கு - ரை) இச்செய்யுள் யமகச்செய்யுள். ஒரெதுகைத் தொடையாற் றெடுக்கப்பட்டதாம். அருந்தவன் - செயற்கரும் சிவபூசனை செய்தற்காகவே கால்களிலும் கைகளிலும் புலிநகம் போன்ற நகங்களையும் கண்களையும் பெற்ற பேறுடையவர். நால் வகைப் பூக்களையும் நயம்பெற எடுத்தருச்சித்தற் பொருட்டே ஆண்டவனிடம் இவ்வரம் பெற்றுளார் என்பது கோயிற்புரா ணங் கூறும். 'தத்து திரைப்பாலுததிதன்னை, யழும் வெம்புலி யின், புத்திரனுக் கீயும் புலியூரே' என்பது புலியூர் வெண்பா வாகும் காமனை எரித்த காரணத்தாற் கண்ணுதற் கடவுளுக்கு காமாரியெனப் பெயர் வந்தது. தன்வழி செல்லாது என்வழி வசப்பட்டதால் நல்நெஞ்சே என்றூர். ஆர். முதலாகு பெயராய் ஆத்திப் பூவினையுணர்த்திற்று; கோட்டுப் பூவகையினைச் சார்ந் தது இடபவூர்தியில் இமய பர்வதராசன் புதல்வியாராகிய உமாதேவியாரொடும் எழுந்தருளிக் காட்சியளித்தல் பெறும் பேருகும். நற்கதி - பேரின்பமாகிய பேராவியற்கையாம். பாரி யாள் - பிரியாவிடையாகிய பெரிய பிராட்டியார், உமாதேவியார் ஆம்.

(சந்தக் கலிவிருத்தம்)

கதிநீயரு மறைபோற்றிய கருணலய னேநின்
துதிபேசுமு றுதிமேவிய தொண்டர்க்கெளி யாவைந்
நதியீச்சுர வுனையல்லது நாயேன்பிற தேவை
மதியேனல மதிதந்தருள் மதிசூடிய பொருளே. (51)

(சொ - ள்) அருமறை போற்றிய கருணை ஆலயன் ஏ - அறிஞர்களாலும் அறிதற்கு அருமையாகிய வேதங்களால் துதிக் கப்பெற்ற அருளுக்குறையுள் ஆனவனே. நின் துதி பேசும் உறுதி மேவிய தொண்டர்க்கு எளியாய் - தேவரீருடைய திருப் புகழினையே தோத்திரமாகப் பேசிடும் வயிராக்கியம் பற்றிய அடியவர் தமக்கு மிகவும் எளிமையாக வுடையவரே! ஐந்நதி ஈச்சுர உ(ன்)னை அல்லது - திருவையாற்றில் எழுந்தருளியுள்ள தேவாதி தேவரீரே, தேவரீரையல்லாமல், நாயேன் - நாயின் தன்மையேன், பிறதேவை - வேறொரு தெய்வத்தை, மதியேன் -

ஒருபொருளாகக் கொள்ளகில்லேன். ந(ல்)ல மதிதந்து அருள் - நல்ல சிவஞானத்தைக் கொடுத்தருளுவீராக. மதி சூடிய பொருளே - இளம்பிறையினை எழிலுறத் தரித்த பரம்பொருளே! நீ கதி - தேவரீரே எனக்கு கதியாம் பிறிதொன்று மின்றும் (கதி அருள் - முத்திப் பேற்றினையருள்க.)

(கு - ரை) மதிசூடிய பொருள் - பிறைமுடிக்கண்ணிப் பெரியோன். (சந்திரசேகரன்) தொண்டர் - அடியவர்.

"வேதநெறி சைவநெறி பத்திநெறி வழாதுவாய் மெய்
சிந்தைதான் அரன்அடிக்கே செலுத்தினராய்ச் சிவாநுபவச்
செல்வராகிப்
பந்தமாந் தொடக்கஅறு தவர்களே தொண்டராகுவர்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் படுமோ!

என திருத்தொண்டர் புராணம் வழங்கிய சேக்கிழார் அருளிச் செய்தமை யாழ்ந்து சிந்திக்கத் தக்கதாம். அடியார்க்கெளியன், என்பது அருள்வாக்கு. ஐந்நதி - திருவையாறு. பிறதேவை - செத்துப் பிறக்கின்ற சிலநலன்களை யருளும் தெய்வங்களை. மதியேன் - கருதமாட்டேன். நல்லமதி - சிவனையொப்பார் ஒரு தெய்வம் இல்லெனும் உறுதிப்பட்ட சிவஞானம். கருணையன் - அருளுக்குறையுளாகியுள்ளவன். துதி - போற்றுதல். மதி - இளம்பிறை. தக்கன் சாபத்தாற் குறைவுபட்ட சந்திரன். குறை மதியினையும் நிறைமதியாக் கொள்ளவைத்தார் பரமன் என்பது வரலாறு. 'நின்னருளே கண்ணகக் காணவேண்டுமென்பார் நலமதி தந்தருள்' என்றார்போலும். ஏகாரம் - ஈற்றசை. விளியுமாம். (தொடரும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Panchanathiswaraswami Devasthanam, Thiruvaiyaru.

I am tremendously inpressed with the magnititude and grandier of this ancient temple. The temple is well maintained and I have pleasure to congratulate the authorities. The visit indeed is very much rewarding.

(Sd.) A. Chidambaram,
District Judge,
Madurai.

15—9—72.

சிவதருமோத்தரக் கட்டுரை எண் 9.

ஐவகை யாகங்கள்

தருமையாதீனப்புலவர், மகாவித்துவான்
திரு. ச. தண்டபாணி தேசிகர்

[தொடர்ச்சி: சிவஞானிகள் செய்யும் செயல்கள் சிவச் செயல்களே என்பதும் அவைகளால் வரும் பயன்கள் அவர்களைச் சாரா என்பதும் உணர்ந்த நமக்கு உண்மைச் சிவஞானியர் யார் என்பதையும் வரைந்து உணர்த்துகிறது சிவதருமோத்தரம்.]

பிறப்பும் இறப்பும் வினைவயப்பட்டு உழலுவார்க்கே உரிமை. அங்ஙனம் அன்றி ஆசை முதலான குற்றங்கள் அனைத்தையும் ஒழித்து வினை நுகர்ச்சிக்கு சாதனமான உடலையும் வருத்தி அறிவும் ஒளியுமே வடிவான சிவபெருமானது திருவடித் தாமரைகளைப் பற்றினவர்களே பிறவிக்கடலை நீந்திய உண்மைஞானிகள்; சிவஞானிகள்.

காமம் முதலிய அழுக்குகளுக்கு உறைவிடமாய், விருப்பு வெறுப்பு முதலானவற்றால் மனம் மயங்கி வருந்துகின்ற மக்கள் எவ்வளவுதான் படித்திருந்தாலும்; ஞான சாத்திரங்களையே படித்திருந்தாலும் ஓர் இம்மி அளவும் தம் அனுபவத்திற்குக் கொண்டுவந்து எல்லாம் சிவன் செயல் என்று தற்போதம் அடங்கி இருக்கத் தெரியாத நிலையில் அவர்கள் ஞானிகளுமாகார்; அவர்களுக்குப் பிறவி நீக்கமும் இல்லை என்பது உறுதி.

"கவிந்த உள்ளத்திற்கே களிப்புண்டு"

வான மண்டலத்தில் சூரியன் பேரொளிப்பிழம்பாகவிளங்கிக் கொண்டிருக்கிறான். ஆனாலும் கண் கெட்டவன் கதிரவனை அறிவானா? அதுபோல ஆணவ மலம் என்கின்ற படலம் மக்கள் கண்ணை மறைத்திருக்கின்றது. அது இருள் போன்றது. இல்லை! இல்லை! இருளைக்காட்டிலும் கொடியது. இருள் தன்னையாவது காட்டும். ஆணவ இருளோ தன்னையும் காட்டாது. பொருளையும்

காட்டாது. அதனுல் கொடியது. அத்தகைய மலத்தால் மறைக்கின்ற மக்கள், ஔிப்பிழம்பாகிய சிவனை ஒருபோதும் அறிய முடியாது. அப்படியானுல் சிவன், என்றும் மக்களால் அறியப்படாதவனே? என்றும் எவ்வகையானும் அறியப்படாத பொருளைப் பற்றி நமக்கென்ன கவலை என்று கேட்கலாம். சிவம் என்றும் எவரானும் அறியப்படாத ஒன்றன்று. நம்முடைய அறிவுப் புலனை மறைக்கின்ற ஆணவமல சக்தியைக் கெடுத்த பேர்கள் அறியலாம். அனுபவிக்கலாம்.

ஆனுல் ஆணவமலத்தின் வன்மையை வாட்டுவது எப்படி என்பது அடுத்த கேள்வி. ஆணவமலம். அநாதியானது; என்றும் ஆன்மாவைச் சார்ந்தே நிற்பது. அதன் வன்மையை வாட்ட வேண்டுமானுல் சிவனது சக்தியாகிய திருவருள் ஒன்றினுல்தான் இயலும். இடைவிடாத சிவபூசை, சிவனடியார் நேசம், சிவாலய வழிபாடு, சிவபுராண சிந்தனை இவற்ருல் நாளுக்கு நாள் சிறிது சிறிதாக ஆணவ மலத்தைத் தேய்த்துக் கொண்டே வந்தால் இறைவனிடம் திருவருள் அமுதம் சுரந்து, சிவான்மாவிடம் பாயும் அது. பாயப்பாய ஆணவமல வன்மை ஒடுங்கும். இருள்தேய ஔியைப் பரவித்தல் போல ஆன்மா சிவஞானம் பெற்றுத் திகழும். அத்தகைய ஆன்மாவே சிவனடியைத் தரிசிக்கும் சிறப்பினையுடையது.

காற்று எங்கும் இயங்குகிறது. ஆனுலும் தனக்கு ஆதாரமான ஆகாயத்தை விட்டு ஒரு அணுவும் விலகுவதில்லை. அதுபோலத்தான் சிவஞானிகளும். கொடியன் ஒருவன் சிவஞானி ஒருவனை வெட்ட வருகிருன். அவன் பொருளைக் கவர வருகிருன். புலி விரட்டுகிறது, யானை துரத்துகிறது என்று வைத்துக்கொள்வோம். அப்போது நம் எல்லாரையும்போல சிவஞானி சிந்தையிலும் அச்சம் உண்டாகத்தான் செய்யும். அப்போதும் அவர்கள் திருவடித்துணையைப் பற்றிநின்று அச்சத்தால் விளையும் அவதிகள் சிறிதுமின்றித் திகழ்வார்கள்.

ஊர்வசி, ரம்பை, மாயை போன்ற உலகப்பேரழகிகள் தாமே வலிய வந்து இவர்கள் தோள்களைப் பற்றி நலன் நுகருவார்கள். ஆத்தீண்டு குற்றியாகிய கல்லைப் பசு தன் தினவைப் போக்க உரசுகிறது. பசுவிற்கு இன்பம்தான். கல்லிற்கும் இன்பம் உண்டு என்று சொல்லுகின்ற அறிவாளிகள் இருக்க முடியுமா? அது போலச் சிவஞானிகளும் மாலை மாதர் முதலிய போகங்களைச் சாரலாம். சார்ந்ததால் விளையும் பயன் மாலைக்கும் மாதருக்குமின்றி இவர்கள் உள்ளத்தைச் சிறிதும் தீண்டுவதில்லை.

கோபம் உயிர்க்குணமாதலின் பிறதீமை கண்டவழி கருணை அடிப்படையாகக் கொண்ட கடுங்கோபம் அவர்கள் கருத்தில் விளையலாம். அதனல் அவர்கள் பிறரைத் தண்டிக்கவும் செய்யலாம். அதனல் விளையும் பாவங்கள் சிறிதும் பற்ருர். அதற்குக் காரணம் என்னவாய் இருக்கமுடியும்? நன்மையோ தீமையோ நம்முடைய மனம் செயலில் அழுந்தி, செயலின் பயன் சிந்தனையைக் கவர்கின்றபோதுதான் புண்ணிய பாவங்கள் விளைகின்றன. சிவஞானியர் சித்தம் தேக, இந்திரிய கரணங் களைக் கடந்து அறிவினுள் அறிவாய் மன்னியிருக்கின்ற சிவன் சேவடியே பற்றி நிற்கிறது. அதனல் அவர்கள் செயல் புண்ணிய பாவங்களுக்கு வித்தாகாது.

சிவன் வெளிப்பட்டு விவரிக்கும் முறைமை

சிவன் அநாதி வித்தியமானது. அருளே வடிவானது. இயல்பாகவே பாசங்களின் நீங்கிப் பரிசுத்தமானது. அத்தகைய சிவபரம்பொருள் புலன்களால் மயங்காத புனிதராகிய சிவஞானி யருக்கு எங்கும் தோன்றி நின்று அருள்செய்வன். அதாவது பரத்தைப் பார்த்திருப்போர் பத பதார்த்தங்கள் பாரார் ஆகவின், எல்லாம் சிவமாகத் தோன்றும்.

எக்கணமும் இறைவன் திருவடியைத் தைவருசிந்தையராய் இருக்கின்ற ஞான யோகிகளுக்கு எல்லாம் துன்பம் கலவாத இன்பமயமாகத் தோன்றுவதால் அவர்களுக்கு இதய கமலத்தில் தோன்றி நின்று அருளுவன்.

அக்கினி காரியம், வேள்வி முதலியன செய்தலே தம் கடமை என்று எண்ணுகின்ற அந்தணர்களுக்கு அவர்கள் செய்கின்ற வேள்வி குண்டத்தில் தீயில் தோன்றி அருள்செய்வர். மல மாய கன்மங்களோடு கூடிய நமக்கெல்லாம் சிவலிங்கம் முதலிய திருவுருவங்களிலிருந்து நம்முடைய பரிபாகங்களுக்கேற்ப அருள் செய்வர்.

இவருள் யார் உயர்ந்தார்? உயர்ந்த மாணிக்கத்தையே ஒருவன் வைத்திருக்கிருன். அவனுக்கு விளைவது மகிழ்ச்சி ஒன்றே! அதுபோலச் சிவஞானியருக்குச் சிந்தையின் நிறை வாகிய இன்பமே என்னுளும் துன்பமில்லை.

ஒருவன் அம்மி, குடைக்கல், முதலியவற்றைத் தலையில் சுமந்து விற்கப் போகிருன். அவன் அடையும் பொருளோ அற்பம். அவற்றைச் சுமந்து கொண்டு விலைகூறித் தெருத்தெருவாக

அலையும்போது உண்டாகும் வருத்தமோ மிகுதி. அதுபோல ஜெபம், தபம், தானம், பூசை முதலியவற்றைச் செய்பவர்கள் பெறும் பயனே மிகச் சொற்பம். அடையும் துயரமோ மிகப் பெரியது. ஆகையால் சிவஞானியர்களே மிகச் சிறந்தவர்கள்.

அவர்கள் வாழ்கின்ற இடம் மிகச் சிறந்தது. இவர்கள் வாழுகின்ற இடத்திற்குக் கோடி வில்கிடைத் தூரத்தளவு பாவங்களும் தீமைகளும் வரா. அங்கிருக்கும் இடங்கள் யாவும் புனிதமான கங்கையும், காவிரியும்தான். இங்ஙனமே கங்கை முதலான புண்ணிய நதிகளுக்கு அறுபதினாயிரம் விற்கிடை அளவும், சிவாலயங்களுக்கு முப்பதினாயிரம் விற்கிடையளவும் பாவங்கள் எய்தா என்று ஆகமங்கள் பகர்கின்றன. சிவ பரம்பொருளையே சிந்தையில் தெளிந்து தேர்ந்து சிவானுபவத்துள் அழுந்திய சிவஞானிகள் ஆடும் புனல் கங்கை முதலிய புண்ணிய நதிகளாம். அவர்கள் வாழுமிடம் சிவத்தலமாம். ஆகையால் பாவங்களைக் கழிக்க எண்ணுகின்ற பக்குவ ஆன்மாக்கள் எப்பொழுதும் அவர்கள் வாழுகின்ற சூழ்நிலையிலேயே வசிக்கக் கடவர்.

மன்னர்கள் மனையிலே வாழுகின்ற ஏவல் செய்வாரும் எண்ணற்ற பயன்களை எய்துகிறார்கள். புறத்திலே ஏவல் செய்வார்கள் அதற்கேற்றப்படி பயனை அடைகிறார்கள். தொடர்பின்றி அயலாக வாழ்கின்ற மக்கள் அரசனிடம் ஒரு பயனையும் சிறப்பாக எய்துவதில்லை. அதுபோல சிவ பரம்பொருளைச் சிந்தையிலிருத்தி தியானத்தால் அருச்சனை செய்கின்ற சிவஞானியர் பெரும்பயனை எய்துகிறார்கள். புறத்தே பூசைசெய்வோர் அதற்கேற்ற அளவான பயனைத்தான் எய்த இயலும்.

மனைவி, அயலார்ஒருவரும்அணுகமுடியாதஅந்தப்புரத்திலே பள்ளியறையிலே தனித்துத் தன் கணவனை அணுகுகிறாள். அவனும் அவளுக்கு மனமகிழ்ச்சியை ஊட்டுகிறான். அதுபோல சிவபெருமானும் இதயகமலத்தில் எப்பொழுதும் தியானிக்கின்ற சிவஞானிகளுக்குச் சிவபோகத்தை எப்பொழுதும் அருளுகிறார்.

இதய கமலத்துள் அகிம்சை முதலான அஷ்டபுஷ்பங்களைக் கொண்டு அருச்சனை செய்வோருக்கு உலகத்தில் பலவகையான போகங்களையும் தந்து எடுத்த பிறப்பிலேயே சிவபோதம் மிகச் செய்து திருவடியை அளிக்கின்றார். நமக்குள் சிவஞானமே நாம் அடையத் தக்கது. "வேருள போகமெல்லாம் விதலோடு துன்பம் ஆக்குபவை" என்று எண்ணி வழிபடுவாருக்குப் பிறவியைக் கெடுத்து போகங்களை வெறுக்கச்செய்து சிவஞானம் பெற்றுச் சிவனைக் கண்ணாலே தரிசித்து என்றும் மாறா இன்பத்தோடு திருவடியைக் கலந்திருப்பார்கள்.

அத்தகைய ஞானவேட்கை உத்தமம், மத்திமம், அதமம் என மூவகைப்படும். அவற்றுள் அதம நிலையான ஞானவேட்கை உற்ற பேர்கள் மூன்று பிறவிகள் எடுத்து மூன்றாவது பிறவியிலே ஆணவபாசம் நீக்கப்பெற்று ஞானயோகத்தைப் புரிந்து ஆனந்த வெள்ளத்தில் அழுந்தியிருப்பார்கள்.

சிவஞானத்திலே நடுத்தரமான ஆசைகொண்ட பேர்கள் சிவலோகத்தை அடைந்து பின்பு பூமியில் இரண்டு பிறவி எடுத்து இரண்டாவது பிறவியில் உடற்பற்றையும் உதறிக் குருவின் திருவருளால் இறைவன் திருவடிகளை எண்ணி யெண்ணி மலம் நீக்கம் பெற்றுப் பரமுத்தியை அடைவர்.

அங்ஙனமே மிகவுயர்ந்த ஆதரவு பெற்றோர்கள் சிவலோகத்தையடைந்து மீண்டும் ஒரு பிறவி எடுத்த உடம்பிலேயே விருப்பு வெறுப்பு அற்று நின்மல சொரூபமான பரவெளியைப் பார்த்துப் பார்த்து எடுத்த உடலையும் போட்டுத்தன்னை நீங்காது இருக்கின்ற சிவானந்தத்திலே வாழ்வார்கள்.

இங்ஙனமாக சிவஞானியர் சிவஞான வேட்கையுற்றோர் இவர்கள் அடையும் பயனையும் சிறந்தார் இழிந்தார் யார் யார் என்பதையும் தெரிவிக்கிறது சிவதருமோத்திரம் என்னும் ஆகமம். (வளரும்)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkali.

I am overwhelmed by the maintenance, cleanliness, and the courtesy shown by the temple authorities. The sanctity of the temple and the divine atmosphere is impressive and appealing. The historic and religious background and the surroundings create a sense of calmness and peace in the mind of the devotee. I am grateful to the temple authorities for giving me a good dharsan of the Lord and mother.

(Sd.) N. Padmanabhan,
Director, Institute of Physiology
Medical College, Madras.

23—9—72.

திருமந்திரம் - மூலமும் உரையும்

திருக்குறள்வேள்

திரு. ஜி. வரதராஜப் பிள்ளை B. A.,

(மலர் 31. இதழ் 10. பக்கம் 572 இன் தொடர்ச்சி)

265 வழிநடப் பாரின்றி வானோர் உலகங்
கழிநடப் பார்நடந் தார்கரும் பாரு
மழிநடக் கும்வினை மாசற வோட்டிட்
டொழிநடப் பார்வினை ஓங்கிநின் றாரே.

வழிநடப்பாரின்றி - அறவழியில் நடப்பவராக இல்லாமல். வானோர் உலகம் கழிநடப்பார் - தேவர்உலக இன்பம் நீங்கும் வண்ணம் தீய வழியில் நடப்பவர். கரும்பாரும் நடந்தார் - இருள் சூழ்ந்த உலமாகிய நகரத்தில் நடப்பவராவர். மழி நடக்கும் வினை மாசு அற ஓட்டிட்டு - காமம் வெகுளி மயக்கம் ஆகிய குற்றங்களைக் களைந்து. ஒழிநடப்பார் வினை ஓங்கிநின்றாரே - அவைகளினின்றும் நீங்கி சன்மார்க்கத்தில் நிற்பவர் வினைகடந்து நின்றவராவர்.

வானோர் உலகம் - ஒளி உலகம். கரும்பார் - இருள் உலகம். மழித்தல் - முழுதும் நீக்குதல். வினை மாசு - வினையால் வரும் குற்றம்.

சன்மார்க்கத்தில் நிற்பவர் வினை கெடுவர் என்பதாம்.

266 கனிந்தவர் ஈசன் கழலடிகாண்பர்
துணிந்தவர் ஈசன் துறக்கம தாள்வர்
மலிந்தவர் மாளுந் துணையுமொன் றின்றி
மெலிந்த சினத்தினுள் வீழ்ந்தொழிந் தாரே.

கனிந்தவர் ஈசன் கழலடி காண்பர் - எல்லா உயிர்களுக்கும் கருணை காட்டுபவர் ஈசனது திருவடியைக் காண்பர். துணிந்தவர் ஈசன் துறக்கமது ஆள்வர் - விரக்திகொண்டு உலகினை விட்டுத் துணிவுடன் தவம் செய்தவர் சாயுச்ய நிலையை அடைவர். மலிந்தவர் துணையும் ஒன்றின்றி மாளும் - உலக நிலையில் நின்று

அறன் அல்லவை செய்பவர் வழித்துணையாகிய இறைவன் அருளற்று மாள்வர். மெலிந்த சினத்தினுள் வீழ்ந்து ஒழிந்தாரே - காலனுடைய சினத்துக்கு ஆளாகிப் பயத்தைத் தரும் நரகில் வீழ்ந்து அழிவர்.

கனிதல் - உயிர்கட்கு இரக்கம் காட்டுதல். துணிதல் - உலகம் அநித்தியம் என்று துணிதல். மலிதல் - தன்நிலையில் தாழ்தல். மெலிதல் - சினத்துள் வாடுதல்.

அறமல்லாதவற்றைச் செய்பவர் துணையின்றிச் சினத்துள் வீழ்ந்து கெடுவர்.

267 இன்பம் இடரென் றிரண்டுற வைத்தது
முன்பவர் செய்கையி னாலே முடிந்தது
இன்பம் அதுகண்டும் ஈகிலாப் பேதைகள்
அன்பிலார் சிந்தை அறம்அறி யாரே.

இன்பம் இடர் என்று இரண்டுற வைத்தது - உலகில் இன்பமும் துன்பமும் ஆகிய இண்டும் பொருந்தி இருப்பது. முன்பு அவர் செய்கையினாலே முடிந்தது - முற்பிறப்பில் அவரவர் செய்த அறச் செயலுக்கும் மறச்செயலுக்கும் ஏற்ப ஆகும். இன்பம் அதுகண்டும் - அறத்தினால் இன்பம் அடைதலைக் கண்டுவைத்தும். ஈகிலாப் பேதைகள் சிந்தை அன்பிலார்- கொடுப்பது அறியாப் பேதைகள் அன்பில்லாத சிந்தையுடையராய். அறம் அறியாரே - அறத்தினை அறியமாட்டார்.

இன்பமும் துன்பமும் அறத்தாலும் மறத்தாலும் உயிர்கட்கு வந்து பொருந்துவன. அறமும் மறமும் காரணம். இன்பமும் துன்பமும் பயன் என்றறிக. அறம் அறியாமையாவது, அறத்தால் இன்பம்வருவது அறியாமை.

“ அறத்தால் வருவதே இன்பம் ”

என்பது நாயனார் வாக்கு.

பேதைகள் அறத்தைச் செய்து இன்பம்அடையாதுகெடுவர்.

268 கெடுவது மாவதுங் கேடில் புகழோன்
நடுவல்ல செய்தின்ப நாடவும் ஒட்டான்
இடுவதும் ஈவதும் எண்ணுமின் இன்பம்
படுவது செய்யிற் பசுவது வாமே.

கெடுவதும் ஆவதும் கேடில் புகழோன் - கேட்டினையும் ஆக்கத்தையும் ஊட்டச் செய்கின்ற கேடில்லாத புகழையுடைய இறைவன். நடுவல்ல செய்து இன்பம் நாடவும் ஒட்டான் - நேர்மையற்ற செயலைச் செய்து இன்பம் பெற அனுமதிக்கவும் மாட்டான். இடுவதும் ஈவதும் எண்ணுமின் - ஆகவே தக்கார்க்கு இடுதலையும் வறியார்க்கு ஒன்று ஈதலையும் நினையுங்கள். இன்பம் படுவது செய்யின் பசுவதுவாமே - பிறர் இன்பம் கெடும்படி யாக நடப்பது மிருகத்தனமாகும்.

இன்பமும் துன்பமும் அவரவர் செயலால் வந்தன என்று முன்னே கூறி இங்கு அவற்றுக்குக் காரணமான வினையை ஊட்டச் செய்பவன் இறைவன் என்றுபொருந்தக் கூறிய அழகைக் கண்டு மகிழ்க.

தீமை செய்வது மனிதப் பண்புக்கே ஒத்தது அன்று.

269 செல்வங் கருதிச் சிலர்பலர் வாழ்வெனும்
புல்லறி வாளரைப் போற்றிப் புலராமல்
இல்லங் கருதி இறைவனை ஏத்துமின்
வில்லி இலக்கெய்த விற்குறி யாமே.

சிலர் பலர் வாழ்வெனும் புல்லறி வாளரை - சிலருக்கும் பலருக்கும் வாழ்வு தருகிறோம் எனத் தருக்கும் அற்ப அறிவுடையோரை. செல்வம் கருதிப் போற்றிப் புலராமல் - அவரது அழிகின்ற செல்வத்தைக்கருதி வாழ்த்தி வாடாமல். இல்லம்கருதி இறைவனை ஏத்துமின் - அழியாத செல்வமாகிய வீடுபேற்றினை அளிக்கும் இறைவனைக்கருதி வாழ்த்துங்கள். வில்லி இலக்கு எய்த விற்குறியாமே - வில்லாளன் எய்த அம்பு இலக்கினைத் தவறாது அடைவது போல உங்களது வறுமையைத் தவறாது போக்கி இன்பம்தருவான்.

இல்லம் - வீடு. இல்லை அடைந்தார்க்கு எல்லா நன்மையும் உண்டாகும்.

“ இல்லடைந் தானுக்கும் இல்லாத தொன்றில்லை
இல்லடைந் தானுக் கிரப்பது தானில்லை ” 1417

என்ற திருமூலர் வாக்கை ஒப்பிட்டுக்கொள்க. வில்லி - சிறந்த வில்லாளன். குறி - அடையாளம்.

புல்லறிவாளரைப் போற்றிப் புகழாது இல்லுடையானைப் போற்றிப் புகழவேண்டும். (தொடரும்)

நவராத்திரி விளக்கம்

தனந்தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாந்தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

— அபிராமி அந்தாதி.

நவராத்திரி என்பது வேனிற்காலமாகிய (வசந்தருது) சித்திரை மாதத்தில் வளர்பிறைப் பிரதமை முதல் ஒன்பது நாள் உமாதேவியைக் குறித்து விரதமிருந்து பூசிக்கும் வசந்த நவராத்திரியையும், கார்காலமாகிய (சரத்ருது) புரட்டாசிமாதத்தில் வளர்பிறைப்பிரதமை முதல் ஒன்பதுநாள் பூசிக்கும் சாரதா நவராத்திரியையும் குறிக்கும். இந்நாட்களில் தேவியைப் பூசிக்கவேண்டிய அவசியம் என்னவெனில், வசந்தருது, சரத்ருதுவாகிய இரண்டு ருதுக்களும் யமனுடைய இரண்டு கோரைப் பற்களுக்குச் சமமாக உள்ளவை. அவ்விரண்டினுள் வசந்தருதுவில் வெப்பமிகுதியால் அம்மை முதலிய நோய்களும், சரத்ருதுவில் தட்ப மிகுதியால் காலரா முதலிய நோய்களும் பெருகி மக்களைத் துன்புறுத்துவதால் அவற்றினின்றும் விடுதலை பெற உலக மாதாவாகிய உமாதேவியை விரதமிருந்து பூசித்தல் வேண்டுமென்க. புரட்டாசி மாதத்தில் நவராத்திரியைப் பத்து நாட்கள் கொண்டாடுவதால் தசராத்திரி என்றும், தசரா என்றும் வழங்குவர். இஃது அன்றிப் பொதுவாக அம்பிகையைப் பூசித்தற்குரிய தினங்கள் மங்களவாரம், சுக்ரவாரம், கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி, பிரதோஷம் முதலியனவாம்.

விரதம் அனுட்டிக்கும் முறை

அமாவாசையன்று ஒருவேளை உணவுடன் உபவாசம் இருந்து, அடுத்த ஒன்பது நாட்களும் பால் பழம் முதலியன உண்டு மூன்று வேளையிலும் பூசித்தல் வேண்டும். தேவியைக் கும்பத்திலோ (குடம்) அல்லது, பிம்பத்திலோ (உருவம்) மந்திரம், பாவனை முதலியவற்றுள் விதிப்படி ஆவாகனம்செய்து இவ்விரதத்தை இயன்ற மட்டும் சிரத்தையுடன் மேற்கொள்கிறேன் என்று சங்கற்பம் செய்துகொண்டு, நவராத்திரி பூஜையைத் தொடங்கவேண்டும். முதல் மூன்று நாள், தேவியை வீரங்கொடுக்கும் துர்க்கையாகவும், அடுத்த மூன்று நாள் செல்வம் வழங்கும் இலக்குமியாகவும், அதற்கடுத்த மூன்று நாள் கல்வி அளிக்கும் சரஸ்வதியாகவும் பாவித்துப் பூசிக்கவேண்டும்.

விஜயதசமி

கடைசிமூன்றுநாளும் சரஸ்வதிதேவியாகப் பூசிப்பதால் சரஸ்வதி பூஜை என்று வழங்கப்பெறுகிறது. இந்த ஒன்பதுநாட்களும் விரதங் காத்துக் கொண்டாட இயலாதவர்கள் கடைசி மூன்று நாட்களிலு மாவது முறையே துர்க்கை, இலக்குமி, சரஸ்வதியாகப் பாவித்து ஒவ்வொருநாள் பூசிக்கவேண்டும். ஒன்பதாவது நாள் எல்லா ஆயுதங்களையும் கொலுவில்வைத்துப் பூசிப்பதால் ஆயுதபூசை என்றும் வழங்கப்பெறும். தேவி அண்டங்களை எல்லாம் படைப்பவள் என்பதை உணர்த்தவே பொம்மைகளாலான கொலு வைத்துக் கொண்டாடப் பெறுகிறது. தொடக்கநாளாகிய பிரதமையன்று அஸ்தநட்சத்திரமும் சேர்ந்திருப்பது சிறப்புடையதாகும். பஞ்சபாண்டவர்கள் வனவாசத் திற்குச் செல்லும்போது தமது ஆயுதங்களை ஒரு வன்னி மரப் பொந்தில் வைத்துவிட்டுப் போனதாகவும், பின்னர் திரும்பிவந்து அவற்றை அவர்களுள் விஜயனென்னும் அர்ச்சுனன் பூசித்து எடுத் துக் கொண்டதாகவும், பத்தாவது நாள் பேசப்படுவதால் அந்நாளை விஜயதசமி என்றுகொண்டாடுகின்றனர். திருக்கோயில்களில் வன்னி மரத்தடியில் அம்பாள் எழுந்தருளி அம்புபோடுவது இவ்வுண்மையை வலியுறுத்தும்.

விரத பலன்

தினந்தோறும், காலையில் நீராடி நித்திய கடன்களை முடித்துக் கொண்டு தேவியைப் பூசிப்பதுடன் ஒவ்வொருநாளிலும் கன்னிப் பெண்களை (2 வயது முதல் 10 வயது வரையுள்ள, குமாரி, திரிமூர்த்தி, கல்யாணி, உரோகிணி, காளிகா, சண்டிகா, சாம்பவி, துர்க்கா, சுபத்ரா) தேவியின் அம்சமாகப் பாவித்துப் பூசித்து உணவு, உடை, அணிகலன் முதலியவற்றை இயன்றவரை கொடுத்துவர வேண்டுமென்று தேவிபாகவதம் முதலிய நூல்கள் கூறும். பத்தாவது நாளன்று விரதத்தைப் பூர்த்திசெய்து உணவுகொள்ளவேண்டும். இவ்விழாவினை ஆண்கள் பெண்கள் இருபாலாரும் மேற்கொள்ள வேண்டும். ஸ்ரீ இராமபிரான் இந்த நவராத்திரி விழா விரதமிருந்து சீதாபிராட்டியை இலங்கையிலிருந்து மீட்டு நலம்பல பெற்றார். இம் மையில் நல்லனவெல்லாம் கைகூடும். மறுமையில் இந்திராதிபோகங் களும் கிடைக்கும். முடிவில், பேரின்ப வீடும் கிட்டும். முறையாக இவ் விரதத்தை அனுட்டிக்க இயலாதவர்கள் லலிதா சகஸ்ரநாமம், சவுந்தர்யலகரி, சகலகலாவல்லிமாலை, அபிராமி அந்தாதி, மீனாட்சி யம்மை பிள்ளைத்தமிழ் முதலியவற்றைப் பாராயணம் செய்தும், செய்யக்கேட்டும் பயன் பெறலாம்.

ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளைப் புவி அடங்கக்
காத்தாளை அங்கையில் பாசாங்குசமும் கரும்புமங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கொரு தீங்கில்லையே.

திருவருட்பயன் விளக்க உரை

தருமையாதீனப் புலவர், மகாவித்துவான்,

திரு. சி. அருணைவடிவேல் முதலியார்.

(மலர் 31. இதழ் 10. பக்கம் 583- இன் தொடர்ச்சி)

நான்காவது குறள்,

> " ஒளியு மிருளு மொருமைத்துப் பன்மை
> தெளிவு தெளியாச் செயல் "

எனவரும்.

இதன் பொருள் :- ஒளியும் இருளும் ஒருமைத்து - ஒளியிலும், இருளிலும் கண் ஒரு தன்மையையே உடையது; (அஃதாவது, ஒளி, இருள் என்பவற்றையல்லது பிறி தொன்றையும் காணாத நிலைமையை உடையது ஆகவே;) பன்மை தெளிவு தெளியாச் செயல் - பலவாகிய பொருளைக் கண் காணுதல், ஒளியோடும், இருளோடும் விரவிய மயக்க நிலையிலே ஆவதாம்.

விளக்க உரை:- " அறிவேயான சிவத்தில் உள்ளபொழுதும், இருளேயான ஆணவத்தில் உள்ளபொழுதும் உயிர் அவற்றையன்றிப் பிறி தொன்றையும் காணாத தன்மையை உடையது; ஆகவே, அது பல பொருள் உணர்வைப் பெறுவது, ஆணவமாகிய இருளோடும், மாயையாகிய ஒளியோடும் விரவி நிற்கும் நிலையில் ஆவதே " என்னும் பொருளைத் தோற்றுவித்து நிற்றலாம், இக்குறளும் அவ்வணி.

" ஒளி, இருள் " என்றவற்றில் ஏழாவது விரிக்க. அங்ஙனம் விரிக்கவே, " ஒருமைத்து " என்ற பயனிலைக்கு, ' கண் ' என்பது தோன்று எழுவாயாகும்.

' தெளியார் செயல் ' எனப் பாடம் ஓதி, இக் குறட்பாவிற்குப் பிறவாறும் உரைப்ப.

உலகில் ' பகல் ' எனப்படுவது, இருளும், ஒளியும் விரவிய நிலையே. என்னை? ' பேரொளி வரின், கண் பிறி தொன்றையும் காண மாட்டாது ' என்பது, ஒளியின் பெற்றிமை உணர்ந்தோர் அனைவர்க்கும் உடன் பாடாகலின். இது பற்றியே சுத்த நிலையை, ' இராப் பகல் அற்ற இடம் ' என வேறாக வைத்து,

கேவல சகல நிலைகளை, இரவும் பகலுமாகக் கூறுதல் மரபாயிற்று. கேவலம் – தனிமை; அஃதாவது உயிர் ஆணவம் ஒன்றனோடு மட்டும் கூடியிருக்கும் நிலை. சகலம் - கலையோடு கூடிய நிலை; அஃதாவது, மாயையோடு கூடி நிற்கும் நிலை. மாயை உள்ளபொழுது, கன்மமும் உளதாகும். இவை இரண்டுமே அசுத்தமாகலின், மும்மலங்களும் நீங்கிய நிலையே உயிர்க்குச் சுத்தமாம். அது பொழுது உயிர், சிவத்தோடே கூடி நிற்கும்.

இதனால், யாதும் அறியா அஞ்ஞான மேயன்றி, கருவி கரணங்களால் உலகத்தை அறிந்து வருகின்ற பாச ஞானமும் உயிர்க்குத் தூய்மையாகாமை உவமை யளவையின் வைத்துத் தெளிவிக்கப்பட்டது.

இனி, ஒரு ஞான்றும் தனித்து நில்லாத உயிர் பாசங்களின் நீங்கியவழி, கயிறு அறப்பெற்ற ஊசல் தரைபிடத்தன்றி நில்லாமை போலச் * சிவத்தின்கணன்றி நில்லாமையின் அதனை உணராது, தனித்து நிற்பதாக உணரும் பசுஞானமும், இருள் பற்றறக் கழியாத வாதனை நிலையே யாதலின், அதுவும் தூய்மை யாகாமை அறிக.

ஐந்தாவது குறள்

> " கிடைக்கத் தகுமேநற் கேண்மையார்க் கல்லால்
> எடுத்துச் சுமப்பானை யின்று "

எனவரும்.

இதன் பொருள் :- இன்று - ஒருவரும் துணையில்லாது துன்புறும் நிலையில்; எடுத்துச் சுமப்பானைக் கிடைக்க - தானே வலிய வந்து தம்மை எடுத்துத் தன்மேல் வைத்துச் சுமந்து செல்கின்ற துணைவனைப் பெறுதல்; நல் கேண்மையார்க்கு அல்லால் தகுமே - நல்ல நட்பினை உடையார்க்கல்லது கூடுமோ !

விளக்க உரை :- ' ஆணவமேயன்றி மாயை கன்மங்களும் பகையாய்விடத் தனித்து நிற்கின்ற முத்தி காலத்தில் தானே வலியவந்து, தாம் செய்வனவும், தமக்குப் பிறர் செய்வனவுமாய செயல்களுள் ஒன்றும் தம்மைத் தாக்காதவாறு அவற்றைத் தன்னுடையனவாக ஏன்றுகொண்டு காக்கும் துணைவனைப் பெறுதல், கைம்மாறு கருதாத கருணையாளனாகிய இறைவனை அவ்வாறு உணர்ந்தார்க்கல்லது கூடுமோ ' என்னும் பொருளைத் தோற்றுவித்தலின், இக்குறளும் அவ்வணி.

---

* திருமுறை 4. 26–6. சிவஞானபோதம். சூ 8 அதி. 4.

'கிடைத்தல்' வினை, இரண்டாவதற்கு முடிபாதல் இக் காலத்து அரிது. ஆயினும், இங்கு அஃது அவ்வாறு நின்றது. செயவெனெச்சம் தொழிற்பெயர்ப்பொருள் தருதல், பிற்கால வழக்கு. 'தகுமே' என்ற ஏகார வினா, எதிர்மறுத்து நின்றது. தகுதி, இங்கு இயல்வதைக் குறித்தது. 'கேளிர்' எனப் பண் புடைப் பொருளாக ஓதற்பாலதனை, "கேண்மை" எனப் பண் பாக ஓதினார், அப்பண்பு தம்மிடத்தும் உளதாக வேண்டு தலைக் குறித்தற்கு. இன்மை அடியாகவந்த, "இன்று" என் னும் எதிர்மறைக் குறிப்பு வினைப்பெயர், இன்றாய காலத்தை உணர்த்திற்று. 'இன்றாயது துணை' என்பது, எடுத்துச் சுமப்பானை" என்ற குறிப்பினால் விளங்கும்.

'பெத்தான்மாக்களுக்கு மாயை கன்மங்கள் உறவாய் நின்று நலம் செய்யும்; முத்தான்மாக்களுக்கு அவை இறைவனை அடைதற்குத் தடையாய்ப் பகையாவன ஆகலின், 'அவை அவ்வாறான காலத்தில் உயிர்க்குத் துணையாவார் பிறர்யாவர்' என்பது உணர்த்துதற்கு, 'இன்று' என எடுத்தோதினார். முத்தி காலத்தில் தன்னையே எல்லாவற்றிற்கும் முதல்வனாக உணர்ந்து, தம் செயல் அற்று நிற்கும் அன்பரை முதல்வன் மேற்கூறியவாறு தாங்கி நிற்றலை

" சிவனும் இவன் செய்தியெலாம் என்செய்தி யென்றும்.
செய்ததெனக் கிவனுக்குச் செய்த தென்றும்,
பவமகல உடனாகி நின்று கொள்வன்
பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே "*

என்னும் சிவஞான சித்தியால் உணர்க. இவ்வாறு உயிர் தன் செயலற்று நிற்கவே, மும்மலமும் பற்றற்ற நீங்குமாகலின், அந்நிலையே அதற்குத் தூய்மையாவது என்க.

இதனால், 'உயிர் விளக்கமாவது இது' என்பது உணர்த்தப் பட்டது.

ஆறாவது குறள்,

" வஞ்ச முடனொருவன் வைத்த நிதிகவரத்
துஞ்சினனோ போயினனோ சொல் "

எனவரும்,

இதன் பொருள் :- ஒருவன் வைத்த நிதி - ஒருவன் சேமித்து வைத்துள்ள பொருட் குவையை; வஞ்சமுடன் கவர - வேறொரு

---

* சூ. 10-1.

வன் கள்ளத்தால் கவர்ந்துகொள்வதற்கு;துஞ்சினனோபோயினனோ- வைத்தவன் உறங்கிவிட்டானோ, அல்லது அவ்விடத்தை விட்டுப் போய்விட்டானோ ? சொல் - இரண்டில் இது நிகழ்ந்தது என்பதைச் சொல்.

விளக்க உரை :- "சொல்" என்ற விதப்பு, 'சொல்லுமாறு, எதுவும் நிகழவில்லை' என்பதைக் குறித்துநின்றது. எனவே, 'இரண்டும் நிகழாமையால், அந்நிதியை அவனது இசை வின்றி வேறொருவன் கவரக்கருதுதல் பயனில் கருத்தேயாம்' என்றதாயிற்று. முதல்வனது திருவருளை உயிர்கள் தாமே பெறுதற்கு அவன் சோர்வுடையவனும் அல்லன்; அத்திரு வருட்கு வேறாய் நிற்பவனும் அல்லன்' என்னும் பொருளைத் தோற்றுவித்தலால். இக்குறளும் அவ்வணி.

இதனால், 'உயிர்கள் முதல்வனது திருவருளை அவன் வழங்கவே பெறுமல்லது, தாமே பெறுந் தன்மையவல்ல' என் பது கூறப்பட்டது.

ஏழாவது குறள்,

" தனக்குநிழ லின்று வொளிகவருந் தம்ப
மெனக்கவர நில்லா திருள் "

எனவரும்.

இதன் பொருள் :- தனக்கு நிழல் இன்று ஒளி கவரும் தம்பம் எனக் கவர - உச்சிப்போதில் தன்னிடம் பிற பொருள்களின் நிழல்கள் இல்லையாம்படி ஞாயிற்றின் ஒளி ஒன்றையே கவர்ந்து நிற்கின்ற பளிங்குத் தூண்போல, உயிர் ஞானத்தைக் கேட்டுச் சிந்தித்தபின் தெளிதற் காலத்தில், தன்னிடத்துப் பிற உணர்வு கள் இல்லையாம்படி முதல்வனது திருவருள் உணர்வு ஒன்றையே பற்றிநிற்குமாயின்; இருள் நில்லாது - அஞ்ஞானம், வாதனையும் இல்லாதவாறு நீங்கும்.

விளக்க உரை :- 'ஆதலின் அவ்வாறு கவர்ந்து நிற்க' என்பது குறிப்பெச்சம். "தனக்கு" என்றது, உருபு மயக்கம் 'தனக்கு ணிழல்' எனப்பாடம் ஓதுதல் சிறக்கும். "நிழல்" என்றதனாலும், "ஒளி கவரும்" என்றதனாலும் "தம்பம்" பளிங்குத் தம்பமும், 'ஒளி' உச்சிப்போதை ஞாயிற்றின் ஒளியும் ஆயின. காலை மாலைப் போதுகளின் ஞாயிற்றின் ஒளியைப் பளிங்குத் தூண், கிழக்கும், மேற்குமாகிய ஒவ்வொரு புடையே கவர்ந்து, மற்றொரு புடைப் பிற பொருள்களின் நிழலைத் தன்கண் கொண்டு நிற்கும்; உச்சிப் போதை ஞாயிற் றின் ஒளியை அத்தூண் தன்கண் முழுதும் நிரம்பக்கவர்ந்து,

பிற பொருள்களின் நிழலைக் கவரா தொழியும், ஆகவே, பளிங்குத்தூண் ஞாயிற்றின் ஒளியைத் தனக்கு நிழல் இன்றாகக் கவர்தல் உச்சிப்போதிலேயாதல் அறிக. இஃதே பற்றி, அம்மை தன் அருள் பெற்றார் ஒருவரும், அம்மையை,

> "உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகும்
> உணர்வுடையோர்"†

என்றார். அஃது உணராமையால், சிலர், "உச்சித் திலகும்" என்பதை, 'உச்சித் திலகம்' எனப் பாடம் ஓதினர். அதனால் அதற்கேற்பவே பலரும், அத்தொடரை இரண்டாக அறுத்து, வேண்டியவாறே உரை கூறுவாராயினர். அதனுள் "உச்சித்து இலகும் உணர்வு" என்பது, 'உச்சிக்கண்ணதாய் விளங்குவது போன்ற உணர்வு' என்றவாறு. இது, பக்குவ காலத்தில் சத்திநிபாதத்தால் திருவருள் ஞானம் முற்ற விளங்குதற்குக் கூறப்படும் உவமை என்க.

இதனால், 'முதல்வனது திருவருளை முற்றப் பெறுதலே உயிர் விளக்கம்' என்பது கூறப்பட்டது.

எட்டாவது குறள்,

> "உற்கைதரும் பொற்கை புடையவர்போல் உண்மைப்பின்
> நிற்கை அருளார் நிலை"

எனவரும்.

இதன் பொருள் :- உற்கை தரும் பொன் கை உடையவர்போல் உண்மைப்பின் நிற்கை - இருளில் இயங்குவோர் தமக்கு உதவியாக எரிகொள்ளியைக் காட்டி வருகின்ற அழகிய கையை உடையவர்க்கு எஞ்ஞான்றும் பின்னே நிற்றல்போல, பாசப் பற்றில் நின்று மெய்ப்பொருளை நாடும் உயிர்கள், தமக்கு உதவியாகத் தனது திருவருளை வழங்கி வருகின்ற அருளாளனாகிய முதல்வனுக்கு எஞ்ஞான்றும் பின்னே நிற்றலே; அருள் ஆர் நிலை - அவனது திருவருளை நிரம்பப்பெறும் முறையாகும்.

விளக்க உரை :- "உண்மைப் பின்" எனப் பொருட்கண் வந்த, "பின்" என்பதனை, 'உடையவர் பின்போல்' என, உவமைக்கண்ணுங் கூட்டுக. 'கொளும்' என்னாது "தரும்" என்றமையானும், 'உடையவர்போல்' என்றே ஒழியின், 'அவர் இன்னதன் பின் நிற்பர்' என்பதனை உய்த்துணர்ந்து இடர்ப்பட வேண்டுதலானும், உய்த்துணர்ந்து அவ்வாறு உரைப்பினும், ஒளியை உடையதும், அதன் பின்நிற்பதும் வேறு வேறாய்

---

†அபிராமியந்தாதி-1.

வரும் பொருட்கு அஃது உவமையாதல் கூடாமையானும் இவ்வாறுரைப்பதே உரை என்க. 'உதவி செய்யும் கை' என்றற்கு "பொற் கை" என்றார்.

உண்மை, மெய்ம்மை; இங்கு அஃது ஆகுபெயராய், மெய்ம்மையுடைய பொருளை உணர்த்திற்று. உயிர் முதல்வனுக்குப் பின்நிற்றலாவது, அவன் உணர்த்தியவா றன்றித் தானே யாதொன்றனையும் உணர முற்படாமை. இதனை,

"வேண்டத் தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய் நீ
... ...
வேண்டி நீயா தருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டி னல்லால்.
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே"*

என, அவ்வாறு நின்று அருளிய திருமொழியால் அறிக.

இதனால், 'திருவருளை முற்றப்பெறுதல் எவ்வாறு' என மயங்குவார்க்கு, 'அஃது இவ்வாறு' என்பது உணர்த்தப் பட்டது.

ஒன்பதாவது குறள்,

"ஐம்புலனாற் றாங்கண்ட தென்றா லதுவொழிய
ஐம்புலனார் தாமா ரதற்கு"

எனவரும்,

இதன்பொருள் :- தாம் ஐம்புலனால் கண்டது அது ஒழிய என்றால்- உயிர், கருவி கரணங்களைத் துணைக்கொண்டு அறிந்து வந்த தெல்லாம் மெய்ப்பொருள் ஒழிய ஏனையவற்றையே யென்றால்; அதற்கு ஐம்புலன் ஆர் - அம் மெய்ப்பொருளை அறிதற்கு அக்கருவி கரணங்கள் துணையாதற்கு என்ன உரிமையுடையன. தாம் ஆர் - இனி, அக்கருவி கரணங்கள் இன்றி ஒன்றையும் அறியமாட்டாத உயிர்கள்தாம், தனித்து நின்று அம்மெய்ப் பொருளை அறிதற்கு என்ன உரிமை யுடையன !

விளக்க உரை :- எனவே, பாரிசேடத்தால், 'உயிர் மெய்ப் பொருளை அறிதல் அம்மெய்ப்பொருளைத் துணைக்கொண்டே' என்பது போதரும் என்பது கருத்து. புலன், ஆகுபெயர். இஃது ஏனைய கருவி கரணங்கட்கு, உபலக்கணம். 'இன்றுகாறும்

*திருவாசகம் - குழைத்த பத்து - 6.

முதல்வனைக் கண்டு காட்டமாட்டாத கரணங்கள், பின்னர்க் கண்டு காட்டும் என்றற்குச் சான்றில்லையாகையால். அஃது அறியாமையாம்' என்றவாறு.

'பெத்த காலத்தில் கருவி கரணங்கள் சீவ கரணமான இருளாய் நிற்றலின், அப்பொழுது அவை மெய்ப்பொருளைக் காணுதற்குத் துணையாகமாட்டா வாயினும், முத்தி காலத்தில் அந்நிலை நீங்கிச் சிவகரணமான ஒளியாய் நிற்றலின், அப்பொழுது அவை அதற்குத் துணையாக வல்லனவாம்; அவ்வாறன்றி அவை அகன்றொழியுமாயின், ஆன்மாவுக்கு அறிவு நிகழுமாறில்லை' எனச் சிவ சங்கிராந்த வாத சைவரும். பெத்த காலத்தில் ஆன்ம அறிவு பாசத்திற் பொருந்திச் சிற்றறிவாய் நிற்றலின், அப்பொழுது அது மெய்ப்பொருளைத் தனித்து நின்று அறியமாட்டாதாயினும், முத்தி காலத்தில் பாசத்தின் நீங்கிப் பேரறிவாய்ப் பதிஞானத்தோடு ஒப்ப நிற்குமாகலின், அப்பொழுது அது மெய்ப்பொருளைத் தனித்து நின்று அறிய வல்லதாம்' எனச் சிவ சமவாத சைவரும் தாந் தாம் வேண்டுமாறே கூறுவராகலின், அவர் கூற்றுப்பற்றி நிகழும் ஐயங்கள் இதனால் நீக்கப்பட்டன.

"உணர்வி னேர்பெற வருஞ்சிவ போகத்தை
ஒழிவின்றி உருவின்கண்
அணையும் ஐம்பொறி யளவினும் எளிவர
அருளினை "*

"ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக், குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையா னாடுமா னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார் "*

எனப்போந்த மொய்மொழிகள்,

'உடம்பு உள்ளபொழுதே கருவி கரணங்கள் தம் குறும்பொழிந்து நிற்க, முதல்வனது அருள்வழி அவற்றைக் கடந்து அவனைத் தலைப்படும் அதீதநிலை வாய்க்கப்பெற்ற அருமையை

(1) பெரிய புராணம் - திருஞான - 161.
(2) ௸ - தடுத்தாட் 106.

வியந்து போற்றினவல்லது, பாசஞான பசுஞானங்களாலும் அவனைத் தலைப்படுதல் கூடுமெனக் கூறின வல்ல' என்றற்கு, 'சிவபோகம், உணர்வின் நேர் பெற - சிவஞானம் ஒன்றானே துய்க்க - வருவது' எனவும், 'கண்களே கொள்ள, சிந்தையே யாக, சாத்துவிகமேயாக, ஐந்து பேரறிவு, அளப்பருங் கரணம் திருந்து சாத்துவிகம்' எனவும் கிளந்து கூறிய சிறப்பு மொழி களே சான்றாகலின், அவ்விடத்து, 'சிவபோகம், சங்கிராந்த வாத சைவர் சமவாத சைவர் கூற்றுப்படியே தலைப்பட வந்த தோ' என மலைவுண்டாதற்கு இடம் இன்மை அறிக.

பத்தாவது குறள்,

" தாமே தருமவரைத் தம்வலியி னற்கருத
லாமே யிவனு ரதற்கு "

எனவரும்,

இதன் பொருள் :- தாமே தரும் அவரை - தமது பொருளைத் தாமாகவே வறியார்க்கு அளிக்கும் வள்ளன்மை உடையவரை; தம் வலியினால் கருதல் ஆமே - கொள்வாரது வன்செயலால் கொடுப்பவராக நினைத்துப் பிறரும் அவ்வாற்றால் கொள்ள முயலுதல் பொருந்துமோ! அதுபோல; அதற்கு இவன் ஆர் - அத்தன்மையுடைய மெய்ப்பொருளினது அருளை இவ்வுயிர் தனது வலிமையால் பெற முயலுதற்கு என்ன உரிமையுடையது!

விளக்க உரை :- 'கொடுப்பவராக' என்பது சொல்லெச்சம். "அது" அவ்வியல்பினது; என்றது, 'தானாகவே தரும் தன்மை யுடையது' என்றவாறு. எனவே, பாசத்தால் புறத்துச் செலுத் தப்பட்டு, அகநோக்கினை இழந்து நிற்கும் உயிருக்குத் தனது ஞானத்தால் அகத்து நோக்கும் முறைமையைத் தந்து தன்னை உணர்த்தி நிற்கின்ற முதல்வனை, அவ்வுயிர் தனது முயற்சி யால் உணர்ந்ததாகக் கருதுமாயின், அது மயக்க உணர்வாம்' என்றதாயிற்று.

'கருவிகளைத் துணைக்கொண்டாதல், தான் தனித்துநின்று தல் உயிர் முதல்வனை அறியமாட்டாதாயின், பின் அது முதல் வனை அறிதல்தான் எவ்வாறு' என்று எழும் ஐயத்தினை உளத்துட்கொண்டு, 'முதல்வன் கைம்மாறு கருதாக் கருணை யாளனாகலின், அக்கருணை காரணமாக உயிர்களைத் தன்னை நோக்கி ஈர்த்து நிற்றலில் அவன் ஒரு ஞான்றும் பிறழாது நிற்ப, அச்செயல் பக்குவ காலத்தில் அவ்வுயிர்க்குப் பயன் தருவதாகும்; அவ்வழி அஃது அவனது ஞானத்தின்வழி நின்று, அவனை அறியும்' எனக் கூறி, விளக்கம் தரப்பட்டது.

"கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான்"

வித்துவான். திருமதி. ப. நீலா

(மலர் 31. இதழ் 10. பக்கம் 576 இன் தொடர்ச்சி)

54. கீரனுக்கு இலக்கணம் உபதேசித்தது.

கொன்றைத் தெரியல் வேய்ந்த கூடலம் பெருமான் செம்பொன் கமலக் கயத்தழுந்தி வழிபட்ட நக்கீரனைக் கரையேற்றிய கவினுணர்ந்தோம். இப்போது அந்நாவலன் தேறச் செந்தமிழ் தெருட்டிய திறம் பகர்வாம்.

சோமசுந்தரப் பெருமான் ஆணையைச் சிரமேற் கொண்டு கற்றவர் அவையை நண்ணிய கீரன், தன் மனக்கோட்டம் நீங்கப் பெற்றவனாய் மதுரைப் பெருமானின் திருவடிகளில் அன்புறு மனத்தனாகி, நாள் தோறும் பொற்றாமரைத் தடாகத்துள் மூழ்கி இறைவனை வழிபடும் நியமம் பூண்டான்.

கீரன் எண்ணினான் - நம்மைப் போலவே மன்மதனும் ஒரு சமயம் எம்பெருமானின் நெற்றிக் கண்ணினால் வருத்தப்பட்ட போது பிரமனோ திருமாலோ அவனைக்காக்க முன் வரவில்லை. ஆனால் இப்பெருந்தடம் என்னை இம்மையில் காத்தது போலவே எழுமையிலும் காக்கும் என்று மூன்று காலமும் அதில் மூழ்கி, அடியாரின் சேம வைப்பாக விளங்கும் சோமசுந்தரப்பெருமானை வழிபடும் நியமம் கொண்டான்.

மையறு மனத்தான் இப்படி வழிபட அதைக்கண்ட பையரவு ஆரம்பூண்ட பரஞ்சுடர் கீரனுக்கு ஒரு நன்மை செய்யத் திருவுளங் கொண்டான். கீரன் இலக்கணத்தில் இன்னும் நல்ல தேர்ச்சி பெறவில்லை. நலமுடைய, நலமில்லாச் சொற்களை இவனால் தெளிய முடியவில்லை, யாரைக் கொண்டு இவனுக்கு இலக்கணத்தை உபதேசிப்பது என்று இறைவன் யோசிக்கும் போது பங்கயச் செங்கை கூப்பிப் பாலினேர் மொழியாள் கூறத் தொடங்கினாள்.

" அங்கை நெல்லியென அனைத்தும் உணர்ந்த புங்கவா! உனக்கு யோசனை கூறும் தகுதி எனக்கில்லை யாயினும் என்

னெஞ்சில் பட்ட வொன்றைக் கூறுகிறேன். முன்னொரு வைகல் வெள்ளிப் பனிமலையிடத்தில் இந்திரன், பிரமன் மற்றும் சனகனுதி முனிவர்கள் அனைவருமே நெருங்கியிருந்தபோது வடவெல்லை தாழ்ந்தது. அப்போது தேவர்களும் மற்றையோரும் முறையிட்டு நின்னை யொப்பான் ஒருவன் தென்பகுதிக்கு வந்தால் பூமி சமமாகி விடும் என்று சொல்ல, கடலையுண்ட குறு முனியே என்னை யொப்பான் என்று கூறி அவனையும் அவன் துணைவியாகிய லோபா முத்திரையையும் தென்திசைக் கண் ஏவினுய். அப்படி அம்முனிவர் தென் திசைக் கண் வரும்போது 'ஐயனே! அடியேன் ஏகுந் தென் திசையில் தமிழ் நாடென்று ஒன்று உண்டே! அந்நாட்டில் வாழ்பவரெல்லாம் தடையிலாத் தமிழ் ஞானம் பெற்றவர்களாயிற்றே அவர்கள் என்னைச் சந்திக்கும் போது அடியேனுக்கும் தமிழ் தெரிந்திருக்க வேண்டுமே. ஆகவே சித்தம் மாசகலும்படி செந்தமிழ் தன்னை எளியேனுக்கு உபதேசித் தருளவேண்டும்' என்று வேண்டினுர்! அப்போது அவருக்குத் தமிழ் முதநூலை அருளிச் செய்தாயே. அதை எளியேன் நினைவூட்டினேன். இன்னுங்கூட ஒரு செய்தி உண்டு. அகத்தியர் தென்னுடு செல்லும் போது ஐயனே உன் திருமணத்தை அடியேனுல் காண முடியாதே – என்று கசிந்துருக, எம்மைக் கடம்பவனத்தில் கண்டு வணங்கி மலையத்திலிருக்க என நீர் ஆசிர்வதித்தீர். அவ்வாறு தெற்குத் திசைக்கு வந்த குறு முனியும் அவர் துணைவியும் இன்றும் அங்கிருக்கிருர்கள். நம் திருவுள்ளத்திற் கிசைந்தால் அவரையே அழைத்து நக்கீரனுக்கு இலக்கணத்தை உபதேசித்தருளலாம்" – என்று உமை நினைவூட்டினுள். சிவபெருமானும் உமையின் கூற்றை ஏற்று மகிழ்ந்து இனைத்து நிகழ்ச்சிகளையும் மறக்காமல் கூறினுயே, என்று பாராட்டி விட்டு அகத்தியரை நினைத்தார் அவரும் தன்மனைவியோடு இறைவன் திருமுன் வந்து நின்ருர்.

வான்வழி வந்த தவமாகிய தேரினின்றும் பத்தினியோடு இறங்கி வந்து செம்பவள மலையையும் அதன் அருகிலுள்ள இந்திர நீல மலையையும் பணிந்தார். அப்போது நாள்தோறும் இறைவனை வந்து பணிந்து வரும் கீரனும் வந்தான். தன்னருகில் இருந்த மாதவச் செல்வனை நோக்கிய பெருமான் அருந்தவ முனிவ! இக்கீரனுக்கு இயற்றமிழ் செம்மையாய் அமையவில்லை. அதனை நீர் என்னிடம் கேட்டாங்கு இவற்கு விளம்பும் என்று பிணியாகவும் அதற்கு மருந்தாகவும் இருக்கின்ற பெருமான் திருவாய் மலர்ந்தான்.

கீரனுக்கு இலக்கண அறிவு இல்லாததனுல் இறைவனின் பாடலைத் தவறென்ருன். அப்போது சிவபெருமான் சினந்து அவனுக்குப் பிணியைத் தந்தான். இப்போது பிணியைத்தந்த

அவனே அகத்தியரைக் கொண்டு கீரனுக்கு இலக்கணம் கற்பிக்கின்றான். ஆகவே இறைவனைப் பரஞ்சோதியார் "பிணியும் மருந்துமாகிய பெருந்தகை" என்று குறிப்பிட்டார்.

வெள்ளை மாமதியின் பிளவணிந்த வேணிப்பிரானின் கட்டளையை மனத்தினும் சிரத்தினும் தாங்கி, கடலைப் பருகிய குறு முனிவன் நக்கீரனின் உள்ளம் கொள்ளும்படி இலக்கணத்தை அறிவுறுத்தினான்.

இருவகைப் புறவுரையாகிய பொது, சிறப்பு என்ற பாயிரங்களை ஓதி, ஏழுமதம், நாற்பொருள், பத்துக்குற்றம், பத்தழகு, முப்பத்திரண்டு உத்தி - எல்லாவற்றையும் கற்றான். அகத்தியரும் தொகை, வகை, விரிமுறையில் கருத்து, கண்ணழிவோடு கூடிய காண்டிகை உரையாலும், விருத்தியுரையாலும் நூற்பொருளைச் சொன்னார். அகத்தியரின் சொல்லாற்றலையும், அறிவாழத்தையும் கண்ட நுதல் நாட்டச் செல்வன் அவரை அகமகிழத் தழுவி வேண்டியவற்றையெல்லாம் அவருக்குக் கொடுத்து விடையுங் கொடுத்தான்.

அகத்தியர் தன் மனைவியோடு திரும்பிய பின் மலைமகள் தன்நாயகனைப் பார்த்துப் "பெருமானே! நீர் நேரே கீரனுக்கு இலக்கணத்தை உணர்த்தாமல் இப்படிச் செய்தது ஏன்" என்று வினவ இறைவன் விடை கூறினான்

தன்னை நித்தலும் வழிபடுபவன், நிறைய செல்வந்தருபவன், அழுக்காறற்றவன், சொன்ன சொல் கடவாத தூய நெஞ்சத்தினன் இவர்களுக்கே நூலைக் கற்பிக்க வேண்டும். இந்தக் கீரன் நம்பால் அழுக்காறு கொண்டதனால் நாம் நேரேயுணர்த்தாது அகத்தியரைக் கொண்டுணர்த்தினோம் - என்று உமையின் ஐயத்தை அகற்றினார்.

இலக்கண மெல்லாம் உணர்ந்த பின்பு கீரன் தான் முன்னே இறைவனின் பாடற் பொருளை வழு வென்றது எத்துணை தவறு என்பதை உணர்ந்து கழிவிரக்கம் கொண்டான். அதோடு மறைகளுக்கெட்டாத திருவடிகள் நிலத்தில் தோய வந்த பராபரனை இகழ்ந்தது எத்துணை அறிவீனம் என்று உளம் நொந்தான். 'அற்ப அறிவுடையோர் செருக்கி நிற்பர்' - என்பது என்னளவில் உண்மையாயிற்றே - என்றும் எண்ணி வருந்தினான்.

அவனது திருவடிகளுக்குப் பிழை செய்த என் உடம்பை மட்டுமல்ல, உள்ளத்தையும் அவன் நெற்றிவிழி சுட்டது. அவ் வெப்பம் என்னுள்ளே நோயாய் நின்றது. ஆனால் பெற்றதாய் குழந்தைக்குக் கைக்கும் மருந்தைத் தந்து பிணியை அகற்றுவது போல - உமைநாதனும் என் ஆணவ அறியாமைப் பிணியை இவ்வழியில் அகற்றினான் என்றுகூறி அவன் திருவடிகளை மனமகிழ்வோடு பல்தடவை வணங்கி, அகத்தியர் தனக்கருளிய இலக்கண அறிவை ஏனைய புலவர்களுக்கும் தந்து இன்பங் கொண்டு சிறந்து வாழ்ந்தான். (வளரும்)

வாழ்த்தும் அஞ்சலியும்

வி. சுப்பிரமணியன் தி. நகர், சென்னை-17.

தருமை ஆதீனத் தலைமை தங்களை நாடி வந்துள்ளது கண்டு இணையில்லாத பூரிப்பு எய்துகின்றேன். தவம் பெற்ற தவமாகிய தாங்கள் அத்தகைய தகவு பெற்றது நாடு பெற்ற நற்பயன் - தமிழன்னை பெற்ற தவப்பயன் - என்பது மிகையன்று.

சைவம் தழைத்திட, இறையுண்மை எங்கும் துலங்கிட, அருளாட்சி மேவிய பரமாசாரியரான தங்களுடைய இந்தப் பதவியேற்பு பேருதவிபுரிந்திடும் என்பதைத் தங்களுடையபற்பல பணிகளையும் நெருக்கமாக அறிந்திடும் வாய்ப்புப் பெற்றவனாகிய நான் உறுதியாக உணர்கிறேன். "சித்தத்தில் ஆனந்தத் தேனூறும் காட்சி" யெல்லாம் காண்கின்றேன்.

தருமையாதீனத்தின் வழிவழி மாண்பு, தங்களுடையதலைமையால் பொலிவு பெறுகிறது என்று கூறுவேனாகில் அது வெறும் முகத்துதியாகாது; முழுக்க முழுக்க உண்மை.

தாங்கள் பெரும் புலமை பெற்ற புலவர் பெருமான்; சொல்விற்பனம் செறிந்த சதுரர்; வடமறைகளும் தென்றமிழ் நான்மறைகளும் திருமந்திரமும் சிவஞானபோதமும் ஆகமாதிகளும், சைவ சித்தாந்தமும் கசடறக் கற்றறிந்துள்ள கடவுட் பணியாளர்; முற்றும் துறந்த முனிபுங்கவர். இத்தனைச் சிறப்புகளுடன் (உலகாயுதமான) உலகையும் அதன் முழு உருவில் அறிந்திருக்கிறீர்கள் என்பது ஈடு இணையற்ற தனிச்சிறப்பு.

தருமை ஆதீனத்தின் 25 தலைமுறைப் பரமாசாரியர்கள் பெற்றறியாத இந்த அருந் தனிச்சிறப்பைத் தாங்கள் பெற்றிருப்பது, தங்கள் உயர்வை முழுநிலை பெறச் செய்கிறது என்பது அடியேனுடைய பணிவார்ந்த கருத்து.

இவ்வாறு எல்லாச் சிறப்பம்சங்களையும் பெற்ற இணையற்ற நிலையில் பரமாசார்ய பீடம் எய்தியுள்ள தங்கள் அருட் செங்கோல் ஆட்சியில் உலகு உயர்வுறக் கூடிய பல திருப்பணிகளை ஊக்குவிப்பீர்கள் என்று கருதுகிறேன்.

கு. திரு. தேவசேனுபதி,
பிரசாரகர்,
குமரகுருபரர் மன்றம், பிரம்பூர்.

சென்னை - 11,
25—9—1972.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் (25 ஆவது பட்டம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்) காசி சென்று ஆங்கே பரிபூரணம் எய்திய செய்தி கேட்டு அளவில்லாத் துக்கம் அடைந்தோம். எதிர்பாராத நிலையில் இவ்வளவு விரைவில் அவர்கள் பரிபூரணம் எய்தி நம்மையெல்லாம் விட்டு விட்டு மறைந்து விடுவார்கள் என்று எவரும் இவ்வுலகத்தில் நினைத்திருக்கவே மாட்டார்கள். இதற்கான அஞ்சலியும் வாழ்த்தும் ஏற்கனவே உடன் சமர்ப்பித்துள்ளோம்.

பல்லாண்டுகளாகச் சைவ சமயமும் தமிழ் மொழியும், இரு கண்களெனக் கருதித் தொண்டு புரிந்துவரும் நம் தருமை மடத்தின் சேவைகள் சொல்லொணாதது; எழுதற்கரியது. அரும் பெரும் தொண்டுகள் ஆக்கத்திற் குரியன. ஆதீனத்திற்குட் பட்ட பல தேவாலயங்களைச் சீராகவும் தூய்மையாகவும், வைத் திருப்பதில் நிகரற்று விளங்குவது தருமை மடம் என்பதில் ஐயமில்லை. கற்றவர்களை வரவேற்று, அவர்கள் கல்வித்திறனுக் கேற்ற பரிசுகள் வழங்கி பட்டங்கள் கொடுத்து, பாராட்டிக் கவுரவித்து நாளும் செய்து வருகின்றது. மக்கள் தொண்டே மகேசன் தொண்டெனக் கொண்டு பணியாற்றி வருகின்றது. செல்வச் சீர்கள் சிறப்புடனேங்குக.

சென்னையில், தருமபுரம், ஆதீன சமயப் பிரசார நிலையத்தை உருவாக்கி, சிறப்புற நிர்வகித்து, பக்தித் தொண்டும், சைவ சமய இலக்கியத் தொண்டும் புரிந்து, இன்று மடாதிபதியாக எழுந்தருளியிருக்கும் 26ஆவது பட்டம் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் தலைமையில் தொடர்ந்து ஆதீன அறப்பணிகளைச் சிறப்புற ஆற்றிட வேண்டுமென்று, எல்லாம் வல்ல செந்திலாண்டவன் திருவடிகளை மனமொழி மெய்களால் வாழ்த்தி இறைஞ்சுகின்றோம். வணங்கி வீழ்ந்து வேண்டுகின்றோம்.

செய்திகள்

திருப்பெண்ணாகடத்தில் வரவேற்பு வழிபாடு

தருமையாதீனம், 26-ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் 13—8—72 ஞாயிற்றுக்கிழமை காலை 7-30 மணியளவில் சைவ சமய, சந்தான சாரியருள் முதல்வராகிய ஸ்ரீ மெய்கண்ட தேவர் திருவவதாரத் தலமாகிய பெண்ணாகடத்தில் அமைந்திருக்கும் அவரது ஆலய தரிசனத்திற்காவும், பெண்ணாகடம் அன்பர்கள் நிகழ்த்திய குரு வழிபாட்டில் கலந்து கொண்டு ஆசியருளவும் தருமையிலிருந்து அன்பர்கள் புடைசூழப் புறப்பட்டார்கள்.

வழியில் தருமையாதீனத்தின் அருளாட்சிக்கு உட்பட்ட திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தான வாயிலில் பிரசாதம் பார்த்துக் கொண்டு விருத்தாசலத்திற்குத் தெற்கே 7-கல் தொலைவிலுள்ளதும், திருநீலகண்டயாழ்ப்பாணர் அவதரித்தருளியதும், எருக்கினைத் தலவிருட்சமாக உடையதும், தற்காலத்தே இராசேந்திரப்பட்டினம் என வழங்கி வருவதும், திருஞானசம்பந்தரால் பாடல் அருளிச் செய்யப் பெற்றதுமாகிய திருவெருக்கத்தம் புலியூர் சிவத்தளிக்கு எழுந்தருளினார்கள். ஆலய வாயிலில், விருத்தாசலம் திரு. அ. இரத்தினசபாதிச் செட்டியாரும், திருக்கோயில் நிர்வாகிகளும் மாலை அணிவித்து, பூரண கும்ப மரியாதைகளோடு எதிர் கொண்டு வரவேற்றுத் திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் திருக்கோயிலுள் வழிபாடுகள் செய்வித்தனர். திருஎருக்கத்தம் புலியூர் வழிபாட்டிற்குப்பின் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பெண்ணாகடத்திற்கு எழுந்தருளினார்கள்.

பெண்ணாகடம் நகர எல்லையில் ஆயிரக்கணக்கான அன்பர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை வரவேற்று வணங்கத் திரண்டிருந்தனர். சரியாக 10-10-க்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பெண்ணாகடத்திற்கு எழுந்தருளினார்கள், பெண்ணாகடம் திரு. R. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்களும், மேலக்கடை. திரு. இராதாகிருஷ்ண பிள்ளை அவர்களும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு மாலை அணிவித்து, ஸ்ரீ மெய்கண்டார் திருவருட் பிரசாதம் சேர்ப்பித்தனர். நகர எல்லையில் தருமையின் 26-ஆவது குருமணி அவர்களை வழிபட முன்னும் பின்னுமாக 26 கார்கள் அணிவகுத்து நின்றன. அலங்கரிக்கப்பெற்ற யானை முன்னே செல்ல எடுபிடிகள் இருமருங்கும் சூழக்

கொட்டு முழக்கங்களுடனும் எக்காளங்களின் எழுச்சிமிக்க குரலுடனும், A. K. C. நடராசன் குழுவினரின் கிளாரிநெட் இசையுடனும், பல்லாயிரக்கணக்கான ஆண், பெண், இளையர், குழந்தைகள் முதலியயோர் இருமருங்கும் நின்று கை கூப்பி வழிபடவும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் அன்பர்களுக்குத் திருவருட் பிரசாதம் வழங்கிய வண்ணம் நகர் வலமாக எழுந்தருளினார்கள்.

நகர் எங்கும் திருவிழாக் கோலம் பூண்டு பொலிந்தது. வரவேற்பு வளைவுகளும், மாவிலைத் தோரணங்களும், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் திருவருட் சிறப்பினைப் புகழ்ந்தெழுதப் பெற்றிருந்த வாசகங்கள் நிறைந்த தட்டிகளும் சாலையில் கண் கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தன. ½-கல் தூரத்தை வரவேற்பு ஊர்வலம் கடந்து செல்ல ஏழத்தாழ ஒரு மணி நேரம் ஆயிற்று. நண்பகல் 11-மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திரு. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்களின் வளமனைக்கு எழுந்தருளினார்கள் திரு, குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் மாலை அணிவித்து வரவேற்றார்கள். நூற்றுக்கணக்கான ஆண்களும், பெண்களுமான அன்பர்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை வணங்கி அருட் பிரசாதம் பெற்றனர்.

பகல் 11-30-மணி மணி அளவில் அன்பர்கள் புடைசூழப் பெண்ணாகடத்திற்குத் தெற்கே 2-கல் தொலைவிலுள்ள இறையூர் ஸ்ரீ தாகம்தீர்த்தபுரீசுவரர் திருக்கோயிலுக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளினார்கள். ஆலய நிர்வாகிகள் பூரண கும்ப மரியாதையோடு எதிர்கொண்டு வழிபாடு செய்வித்தனர்.

இறையூர் வழிபாட்டுக்குப் பின் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பெண்ணாகடத்திற்குத் தென் மேற்கே 4-கல் தூரத்திலுள்ளதும், தேவார மூவாரலும் திருப்பதிகம் அருளிச் செய்யப் பெற்றதும், திருஞான சம்பந்தப் பெருமானுக்கு முத்துச்சிவிகை, முத்துக் குடை, முத்துக்கிண்ணம் முதலியன வழங்கியருளிய பெருமான் கோயில் கொண்டிருப்பதுமாகிய திருநெல்வாயில் அரத்துறைக்கு எழுந்தருளினார்கள். ஆலய நிர்வாகிகள் பூரண கும்ப மரியாதையோடு வரவேற்றுத் திருக்கோயில் வழிபாடு செய்வித்தனர். அரத்துறை அப்பராகிய ஸ்ரீ தீர்த்தபுரீசுவரரை வழிபட்டுக் கொண்டு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பெண்ணாகடம் ஸ்ரீ மெய்கண்டார் ஆலய தரிசனத்திற்கு எழுந்தருளினார்கள்.

பெண்ணாகடம் ஸ்ரீ மெய்கண்டார் திருக்கோயில் நன்கு அலங்கரிக்கப் பெற்றிருந்தது. நெடுஞ்சாலையிலிருந்து ஸ்ரீ மெய்

கண்டார் ஆலயம்வரை இருமருங்கிலும் மக்கள்குழுமி நின்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை வணங்கிவழிபாடுசெய்தனர். ஆலயவாசலில் அறங்காவல் குழுவினரான கொத்தட்டை சீனுவாசம்பிள்ளை அவர்கள் மாலை அணிவித்து ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களை வரவேற்றார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நி தானம் அவர்கள் ஸ்ரீ மெய்கண்ட தேவனுக்கு விசேஷ அபி ஷேக ஆராதனைகள் செய்வித்து விலையுயர்ந்த உருத்திராக்கக் கண்டிகையொன்றை அணிவித்து வழிபாடு நிகழ்த்தினார்கள். திருக்கோயில் சார்பில் திரு. சீனிவாசம்பிள்ளை அளித்த பொன் னாடையை ஸ்ரீ மெய்கண்ட தேவருக்கே அணிவித்தார்கள். முறையான வழிபாட்டிற்குப்பின் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மாகேஸ்வர பூஜைக்கு எழுந்தருளினார்கள்.

பிற்பகல் 5-30 மணி அளவில் திரு. குஞ்சிதபாதம்பிள்ளை அவர்கள் வளமனையை அடுத்த முத்துக்குமாரன் பூங்காவில் தருமையாதீனம் 26 ஆவதுகுருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீசண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், தருமையாதீன அருளரசாட்சி ஏற்றபின் முதன்முதலாகப் பெண்ணாகடம் எழுந் தருளுவதை முன்னிட்டுப் பெண்ணாகடம் வட்ட அன்பர்கள் நிகழ்த்திய வரவேற்பு வழிபாட்டு விழாத் தொடங்கியது.

திருக்கடவூர் திரு. சிவப்பிரகாச ஓதுவார் கடவுள்வாழ்த் திசைத்தார். பெண்ணாகடம் திரு. தங்கவேல் பிள்ளை அவர்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களையும், விழாவில் பங்குபற்ற வந்திருந்த ஏனையோரையும், விழாக்குழுவின் சார்பில் உரியவகை வரவேற்றார்கள்.

விழாக்குழுவின் சார்பாக 'வரவேற்பு வணக்க நல்லிதழ்' ஒன்றைத் திரு. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் படித்து, மெய் கண்டார் உருவமைத்துச் செய்யப்பெற்றிருந்த வெள்ளிப்பேழை யில் வைத்துப் பணிவோடு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்க ளிடம் சேர்ப்பித்தார்கள். திரு. தங்கவேல் பிள்ளை அவர்கள் பொன்னாடை போர்த்தினார்கள்.

தொடர்ந்து பெண்ணாகடத்தையும், அதனை அடுத்த பகுதி களையும் சார்ந்த பல்வேறு கல்வி, இலக்கியம், கலை, ஊராட்சி மன்றங்கள் சார்பில் வரவேற்பிதழ்கள் படித்தளிக்கப்பெற்று மாலை அணிவிக்கப்பெற்றன.

பெண்ணாகடம் சிவகுருநாதன் கழகத்தின் சார்பில் திரு. K. S. இராதாகிருஷ்ணன் வரவேற்பிதழ் ஒன்றைப் படித்தளித் தார். பெண்ணாகடம் பொதுமக்கள் சார்பில் திரு. தியாகராஜன் மாலை அணிவித்தார்.

அடுத்துப் பெண்ணாகடத்தை அடுத்த கொடிக்களம், திருவரத்துறை, கூடலூர். தொளார், மேலூர், மருதத்தூர், அருசேரி, இரையூர், பெ. பொன்னேரி, நந்திமங்கலம், பெ. பூவனூர், தாழநல்லூர், நாரையூர், கிளிமங்கலம், குருக்கத்தஞ்சேரி, பெலாந்துறை, பாசிக்குளம், சௌந்தரசோழபுரம், மாளிகைக்கோட்டம், கோசப்பள்ளம், துரையூர், சத்தியவாடி முதலிய ஊராட்சி மன்றங்கள் சார்பில் தனித்தனியே வரவேற்பு நல்லிதழ்கள் படித்தளிக்கப்பெற்று மலர்மாலைகளும் அணிவிக்கப்பெற்றன.

மற்றும், பெண்ணாகடம் அருணா சர்க்கரை ஆலை கழகம் சார்பில் திரு. செ. வேணுகோபாலன் அவர்களும், அரசினர் ஆண்கள் உயர்பள்ளிச் சார்பில் தலைமையாசிரியர் திரு. முருகேசன் அவர்களும், மகளிர் உயர்பள்ளிச் சார்பில் அப்பள்ளியின் தமிழாசிரியையும், ஆவினங்குடி உயர் பள்ளிச் சார்பில் தலைமையாசிரியர் திரு. செ. முருகேசம் பிள்ளை அவர்களும் வரவேற்பிதழ் படித்தளித்தனர்.

பெண்ணாகடம் வாழ் ஐயப்பன் வழிபாட்டுக் குழுவினர் சார்பில் திரு. கலியமூர்த்திப் பிள்ளை அவர்கள் வரவேற்பிதழ் படித்தளித்து, ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்குப் பட்டாடைப் போர்த்தி வணங்கினர்.

தனிப்பட்ட முறையில், பெண்ணாகடம் தமிழாசிரியர் புலவர் திரு. சிவப்பிரகாசம் அவர்களும், பொன்னேரி, திரு. முத்துவேல் பிள்ளை அவர்களும், கொத்தட்டை. திரு. கணபதி அவர்களும் வரவேற்பிதழ்கள் படித்தளித்தனர்.

பெண்ணாகடம் திரு. சொ. அண்ணாமலைப் பிள்ளை அவர்கள் வெட்டிவேர் மாலை ஒன்றை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு அணிவித்து வணங்கினர்.

அடுத்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாட்சிச் சிறப்பையும், தெய்விகத் திருப்பணிகளையும், பண்பு மேம்பாட்டுச் சிறப்புக்களையும் பாராட்டி, விழாக்குழுவினரின் சார்பாகத் திருச்சிராப்பள்ளி சைவசித்தாந்த சபையின் செயலாளர், திரு. தி. சு. சிவப்பிரகாசம் அவர்களும், திருச்சிராப்பள்ளி, திருக்குறள்வேள் திரு. ஜி. வரதராஜப்பிள்ளை அவர்களும் சாத்துக்குடல், அமுதமொழிக் கொண்டல் திரு. சுவாமிநாதன் அவர்களும், விருத்தாசலம் திரு. வே. இரத்தினசபாபதி செட்டியார் அவர்களும், திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரிப்

பேராசிரியர் திரு கு. சுந்தரமூர்த்தி எம். ஏ., அவர்களும், ஈரோடு சப்ஜட்ஜ் திரு சோமசுந்தரம் அவர்களும் பணிவுரைகள் நிகழ்த்தினர்.

பாரட்டுப் பணிவுரைகளுக்குப் பின் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான பேரன்பர்களுக்கு இடையே சைவசமயக் கோட்பாடுகளையும், கடமை உணர்வையும், இறைவன் கருணையையும் விரித்துரைத்து அருளுரை நிகழ்த்தி உய்வித்தார்கள் (ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் நிகழ்த்திய அருளுரை - ஞானசம்பந்தம் மலர் 31 - இதழ் 10 - பக்கம் 555 - 561 இல் வெளியிடப்பெற்றிருக்கிறது)

திருச்சிராப்பள்ளி, திருக்குறள்வேள், திரு. ஜி. வரதராஜ பிள்ளை பி. ஏ., அவர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களிடம், ஸ்ரீ மெய்கண்டார் ஆலய வளர்ச்சிக்கென ரூபாய் ஆயிரம் அளித்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருமனப்பாங்கின் வண்ணம் அத்தொகையைச் செலவிடவேண்டினர்கள்.

இறுதியாகக் கொத்தட்டை திரு. சீனுவாசம்பிள்ளை அவர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்குப் பொன்னுடை போர்த்து, விழாக்குழுவின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்ள வாழ்த்தொடு மாலை 8-45 அளவில் பாராட்டு விழா நிகழ்ச்சிகள் இனிதே நிறைவுற்றன.

இரவு 9-45 அளவில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வெள்ளி நாற்காலிப் பல்லக்கில் பட்டிணப்பிரவேசமாக எழுந்தருளினர்கள். சிறந்த நாதஸ்வரம் - கிளாரிநட் இசையுடனும், வாணவேடிக்கைகளுடனும், பெண்ணாகடத்தின் முக்கியவீதிகளின் வழியாக ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் எழுந்தருளினர்கள். வீதிகள் எல்லாம் ஒளிவிளக்குகளாலும் மகரதோரணங்களாலும் அலங்கரிக்கப்பெற்றுக் கோலம்பூத்து விளங்கின. மக்கள் இல்லங்கள்தோறும் பூரணகும்பம் எடுத்து வைத்துத் தீபாலங்காரங்கள் செய்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தைத் தரிசித்துத் தம் குடும்பத்தோடு வணங்கி, அரும்பூதி பெற்றுச் சிறந்தனர்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருத்தூங்கானை மாடப் பெருங்கோயிலுக்கு எழுந்தருளினர்கள். வாயிலிலேயே

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

திரு. K. முத்துஜோதிடர்

(பரிதாபி௵ ஐப்பசிமீ 1௳ முதல் 30௳ முடிய)

(17—10—72 முதல் 15—11—72 முடிய)

ஸ்ரீ சிவபெருமான் திருவருளால் லோகரக்ஷகராயும் கிரஹங்களுக்கு ஆதியாகவும் உள்ள ஸ்ரீ சூரியபகவான் நாளது ஐப்பிசிமீ முதல்தேதியன்று காலை 2-நாழிகை 26-விநாடிக்குக் கன்னியிலிருந்து துலாராசி ஸங்கிரமண புண்ணியகாலத்தோடு துலாலக்கினத்திலேயே பிராத: கால முதல் யாமத்தில் பிரவேசம் செய்கிறார். அதன்பலன் உலகத்துக்குப் பிரதானமாக மத்திய ராஷ்டிரம், தக்ஷிணபாரதம், காவேரிதீரம், புண்ணிய பூமிகள் சோழவளநாடுகள் செழிக்கும். தகுந்த சமயங்களில் ஸுவிருஷ்டி ஏற்பட்டு தேசம் செழிக்கும். தனதான்ய விருத்தி ஏற்படும். உணவுப் பொருள்கள் ஏராளமாய் விருத்தியாகும். தர்மத்தையும், கடவுளையும் நம்பினவர்கள் காப்பாற்றப்படுவார்கள். சுபமுண்டாகும். அதற்குமாறான ஸ்வபலத்தை நம்பினவர்களும் தேசமும் நாசமடையும். இது ஒரு சோதனை காலமாகும். சுபம் மேலும் பல அற்புதங்கள் உலகில் இதுவரை கண்டிராததெல்லாம் தென்படும். எதுவந்தாலும் வரட்டும். நான் கடவுளை நம்பினவன் என்கிற புத்தியோடு பிரஜைகள்தன் கடமைகளைச் சரியாய் நடத்திக்கொண்டு வாழவேணும்; கடவுள் காப்பார். நாம் குழந்தைகளுக்குப் படிப்பு சொல்லிக்கொடுத்து பரீக்ஷிப்பது போல் நம்மை பரீக்ஷித்து பார்க்கக்கூடிய காலம் இது. தர்மமே ஜயம்; கடவுளே சத்தியம்.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபத்தைத் தரும். தூரதேச யாத்திரையும் மேலோர் பெரியோர்களின் ஆசியும் கிடைக்கும். ஆஸ்திக புத்தியும் அதிகமாகும்; தெய்வ நம்பிக்கையும் அதிக

மாகும். துக்கங்கள் எல்லாம் தானாக விலகும். செவ்வாய், புதன் சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். எல்லாக் காரியங்களும் தவக்கத்தோடும் மிகுந்த பிரயாசையோடும் பூர்த்தியாகும். ஸ்திரமில்லாமல் ஜீவனம் இருந்துகொண்டு இருக்கும். தெய்வம் முன்னின்று காக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் சுபமாகும். விவாகாதி சுப காரியங்களும் நடைபெறும். சகல காரியங்களும் சித்தியாகும். தனதான்ய லாபம் அதிகமாகும். தொழில் ஓங்கும், நஷ்டமான பொருள் வந்துசேரும். சனி, ஞாயிறு சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபத்தையே தரும். எல்லாவிதமான நன்மைகளும் தானாகவே வந்துசேரும். எல்லாக் காரியங்களிலும் எதிர்பார்ப்பதைவிட அதிகமான லாபத்தையும் சுபத்தையும் தரும். தெய்வபலம் எல்லாம் தன்னுடைய பலமாகத் தோற்றம் அளிக்கும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். உத்தியோகத்தில் உயர்பதவி ஏற்படும். கைத்தொழில் அதிகமாகும். புதிதான சில முயற்சிகளால் அதிகமான லாபம் உண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் மாதம் முன்பாதியில் விசேஷமான நன்மைகளைத் தரும். ஆரோக்யமும், சந்தோஷமும் ஏற்படும். நூதன வஸ்திராபரணச் சேர்க்கையும் ஏற்படும். பின்பாதியில் குடும்பத்தினரால் சில கவலைகள் ஏற்படும். வெள்ளி, சனி சுபமாகும்.

7, துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும், சுபமான பலனைத்தரும். வம்ச விருத்தி ஏற்படும். சந்தோஷத்தைத் தரும். தெய்வபலம்

முன்னின்று காக்கும். சகலமும் சாத்தியமாகும். ஆரோக்யம் உண்டுபண்ணும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபத்தைத் தரும். விவகாதி மங்களகரமான காரியங்களும் இருப்பிடத்திலேயே இடம் மாறி உத்தியோகத்தில் லாபமும், இல்லற சுகமும் அதிகமாகும். புத்திராதிகளாலும், பெரியோர்களாலும் குடும்பம் செழிக்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.

9. தனுசு - மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். குடும்பம் ஓங்கும். ஜீவனத்தில் லாபம் ஏற்படும். புத்திராதிகளால் பெற்றோர்களுக்கு விசேஷ நன்மை ஏற்படும். எல்லாம் தெய்வ பலத்தால் நன்மையாக நடக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

10. மகரம்-உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் சுபமாகவே இருக்கும். உத்தியோகத்தில் மேல்பதவியும், மேலோர் பெரியோர்களால் நன்மையும் உண்டாகும் உலகப் பிரசித்திக்குத் தகுதியான அநேக விதமான அற்புத காரியங்கள் செய்யும்படி நேரும் கீர்த்தி பத்திரம் கிடைக்கும். ஆரோக்கியம் தரும். சனி, ஞாயிறு சுபமாகும்.

11. கும்பம் – அவிட்டம் ½-சதயம் –பூரட்டாதி–¾

கும்பராசி 9 பாதங்களும் அதிகமான உழைப்பைத்தரும். புண்ணிய காரியங்கள் நடைபெறும். புதிதான தொழிலில் பழக்கமும், அடிக்கடி தொழில் சம்பந்தமாய்ப் பலவிதமான மாறுதல்களும் காட்டும். மாதக்கடைசியில் ஸ்திரமான ஜீவனமும், சுகமும் ஏற்படும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி

மீனராசி 9 பாதங்களும், பூர்ணமாய் சுபபலனைத்தரும். மேலோர், பெரியோர்களின் அன்பினாலும், தெய்வபலத்தாலும் எல்லாக் காரியங்களும் சாத்தியமாகும். வியாதி நீங்கும். உலகப் பிரசித்தி ஏற்படும். புதன், வியாழன் சுபமாகும்.

உ

குருபாதம்

தருமை ஆதீனம்

ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிக்கு

கோடியர்ச்சனை

செந்தமிழ்நாடு செய்த தவப்பயன் காரணமாக இற்றைக்கு நானூறு ஆண்டுகட்குமுன் வில்வாரண்யமெனப்பெறும் இந்நகரில் – திருக்கயிலாய பரம்பரையில் தருமையாதீனத் திருமடத்தை நிறுவியருளியவர்கள் ஸ்ரீ குருஞானசம்பந்தர். அவர்கள் பல ஆண்டுகள் வாழ்ந்து தவம் பெருக்கி அடியார்களுக்கு அருளுபதேசங்கள் வழங்கித் தமக்குப்பின் ஸ்ரீ ஆனந்தபரவச தேசிக சுவாமிகளை ஆசாரியராக நியமித்து ஜீவசமாதி கூடிய இடம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி ஆலயம் என வழங்கப்பெறுகிறது. ஸ்ரீ குருஞானசம்பந்தர் இன்றளவும் இவ்வாதீன அருளாட்சியை முன்னின்று நடத்திவருகின்றார்கள் என்பதை அண்மைக்காலம் வரை நடைபெற்றுவரும் பல அற்புத நிகழ்ச்சிகளால் அன்பர்கள் அறிந்து வழிபட்டு நலம் பெற்று வருகின்றனர்.

இரண்டாவது மகாசந்நிதானமாக விளங்கிய ஸ்ரீ ஆனந்த பரவச தேசிக சுவாமிகள் உபதேசம் பெற்ற உடன் முத்திநிலை கூடியபோது அடியார்கள் இவ்வாலயத்தை அடைந்து விண்ணப்பித்தனர். ஸ்ரீ குருஞானசம்பந்தர் மீளவும் எழுந்தருளிவந்து ஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகளை ஆசாரியராக நியமித்து மீண்டும் சிவசமாதி கூடினார்கள்.

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரையுணர் வற்றதோர் கோவே.

என்ற திருமந்திரத்தின்வண்ணம் விநாயகர் முதலிய பரிவார தெய்வங்களுடன் வேதசிவாகம விதிகளின்படி நித்தியநைமித்திக பூஜைகளோடு சிறந்ததொரு சிவாலயமாக இத் திருக்கோயில் விளங்கிவருகிறது.

தருமையாதீனம் இருபத்தாறுவது குருமகாசந்நிதானம் அவர்களும் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருக்கோயிலில் ஞானபிஷேகம் செய்விக்கப்பெற்ற சிறப்புக்குரியவர்கள். அவர்கள் ஞான பீடம் ஏறிய முதலாண்டு நிறைவுநாளில் உலக நலங்கருதி ஸ்ரீ ஞானபுரீசுவரருக்கும் ஸ்ரீ ஞானாம்பிகைக்கும் கோடியர்ச்சனை செய்விக்கவேண்டுமென்று திருவுளம்பற்றியவண்ணம் அர்ச்சனை தொடங்கி நடந்துவருகிறது.

இத்திருக்கோயிலின் சிறப்பை அன்பர்கள் அறிந்து பயனெய்த அடியிற்கண்ட இச்செய்தியை அறிவிக்கிறோம்.

ஏழாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருவம்பல தேசிக சுவாமிகள் அவர்கள் அருளாட்சிக் காலத்தில் தஞ்சையரசன் கடலாட விரும்பித் தருமையை அடுத்த சாலைவழியாகக் காவிரிப் பூம்பட்டினம் சென்றான். அதுபோது ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில் அர்த்தயாம பூசைக்கு அடிக்கப்பட்ட மணியோசை அவன் செவிகளில் கேட்டது. பல்லக்கைவிட்டிறங்கி மானசீகமாக வழிபட்டுப் பின் பல்லக்கிலேறிப் புறப்பட்டான். அருகிலிருந்தோர் 'சூத்திர சமாதியை வணங்கியதால் பாவத்திற்குள்ளானீர்கள். பிராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டும். மேலும் மற்றையோரும் இக்குற்றத்திற்கு ஆளாகாமல் கோயிலை இடித்துவிடுதல் நலம்' எனக் கூறினர். அரசனும் அவ்வாறே செய்ய ஆணை பிறப்பித்துச்சென்றான். ஏவலர் ஆலயத்தை இடிக்கத்தொடங்கினர். அதனை அறிந்த அடியார்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களிடத்தில் சென்று,

தேசம் சிவாலயங்கள் சேர வலையொரு
மோசம் வந்ததையோ முதல்வனே — தேசத்து
மன்னைவெறுப் பேனோ வருவினையை ஊட்டுவிக்கும்
உன்னைவெறுப் பேனோ உரை.

என்ற சிவபோகசாரப் பாடலை ஓதி முறையிட்டனர். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்,

ஈசன் பலகினன் என்றக்கால் ஆலயத்தில்
மோசம் வந்ததென்று மொழியலாம் — ஈசனே
ஆக்குவதும் ஆக்கி அழிப்பதுவும் தானானால்
நோக்குவதென் யாம்பிறரை நொந்து.

என்ற சிவபோகசாரப் பாடலால் அடியவர்களுக்கு ஆறுதல்கூறி, திருவைந்தெழுத்தைச் செபித்திருந்தனர்.

திருக்கோயிலில் இருப்புக்கோல்பட்ட இடங்களில் எல்லாம் இரத்தவெள்ளம் பெருக்கெடுத்தது. ஏவலர் மூர்ச்சையுற்றனர். அரசன் கண்ணொளி மழுங்கினன். செய்த குற்றத்தை உணர்ந்து தருமையை அடைந்து ஞானதேசிகரைப் பணிந்தான். பிழை பொறுக்க வேண்டினன்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அரசனை ஸ்ரீ ஞான புரீசுவரர் ஆலயத்திற்கு அழைத்துச்சென்று வழிபடச் செய்து அரனை நினைந்து ஐந்தெழுத்தோதித் திருநீறளித்தார்கள். அரசன் ஒருகண் பெற்றான். மகாசந்நிதானம் அவர்கள் மேலும் திருநீற்றைத் தெளித்து மூர்ச்சையுற்றவர்களை தெளிவித்தார்கள். மற்றொரு கண்ணும் ஒளிபெற அருளுமாறு மன்னன் வேண்ட ஒரு மண்டலம் தருமைக்குக் கீழ்பால் தங்கிக் குருதரிசனம் செய்யுமாறு பணித்தார்கள் அவ்வாறே செய்து மன்னன் மற்றொரு கண்ணும் ஒளிவரப்பெற்றான். அர்த்தயாம பூசைக்கு நிலங்கள் அளித்து அருள்பெற்று மீண்டான் என்பது வரலாறு இந்த நிலப்பகுதி இப்போதும் அர்த்தசாமப்படுகை என்று அழைக்கப்பட்டு வருகிறது. மன்னன் தங்கியிருந்த இடம் மன்னன்பந்தல் என இன்றும் வழங்கப்படுகிறது.

இத்தகைய ஞானமூர்த்திகளாக விளங்கும் ஸ்ரீ குருஞான சம்பந்தப் பெருமான் திருக்கோயிலில் நடராசப் பெருமான் சந்நிதிக்கு அருகில் குருஞானசம்பந்தர் சென்று சிவசமாதி கூடிய சுரங்கப்பாதை உள்ளது. இறைவன் ஸ்ரீ ஞானபுரீசுவரர். இறைவி ஸ்ரீஞானம்பிகை. வைகாசி மாதத்தில் குருபூசைவிழாவை யொட்டி மிகச் சிறப்பாக பிரமோற்சவம் நடைபெறுகிறது.

அருள்நலம் கனிந்த வரப்பிரசாதராக இத்திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிக்கும் ஸ்ரீ ஞானம்பிகைக்கும் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளப்பாங்கின்படி கோடியர்ச்சனை நடைபெற்று வருகின்றது.

அன்பர்கள் பலரும் இவ்வருள் முகூர்த்தங்களை வழிபட்டு இவ்வர்ச்சனையில் பங்குகொண்டு அருள்பெற வாய்ப்பளிக்கப் படுகிறது.

சுவாமி அம்பாள்

சகஸ்ரநாம அர்ச்சனை 2-க்கு ரூ. 10—00

நேரில்வர இயலாதவர்களுக்கு அர்ச்சனை விபூதிப் பிரசாதம் தபாலில் அனுப்பப்பெறும்.

தொகை அனுப்பவேண்டிய முகவரி :—

மானேஜர்,
தருமையாதீனம்,
தருமபுரம் - மாயூரம்.



திருக்கல்யாணத் திருவிழாவில்
ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி
வெள்ளித் தேரில் திருவுலா வருதல்.